# தமது பிறந்த மண்ணை நோக்கி

"இடம் பெயர்ந்த மக்களை சுய கௌரவத்துடன் அவர்களின் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல வழிவிடுங்கள்"

யாழ் மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்க்கையின் உண்மை நிலைமை.

ஆய்வு அறிக்கை




தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வெளியீடு

# "இடம் பெயர்ந்த மக்களை சுய கௌரவத்துடன் அவர்களின் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல வழிவிடுங்கள்"

## யாழ்ப்பாண மாவட்டத்தின் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பான ஆய்வு அறிக்கை

Association For Health and Counselling
8,8/1, Katpakavinayagar Lane,
24 JUN 2016
JAFFNA
"SHANTHIHAM"

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் வெளியீடு

# “இடம் பெயர்ந்த மக்களை சுய கௌரவத்துடன் அவர்களின் சொந்த இடங்களுக்கு திரும்பிச்செல்ல வழிவிடுங்கள்”

ஆய்வு அறிக்கை

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்க்கையின் உண்மை நிலைமை மற்றும் நிலம் வாழ்வாதாரம் மனிதாபிமான பிரச்சினையை தேசிய கலந்துரையாடலில் உள்ளடக்குவதன் ஊடாக வினைத்திறன் மற்றும் உடனடியான தலையீட்டினை சம்மந்தப்பட்ட பொறுப்பான பங்காளர்கள் மேற்கொள்ளுதல்

**செப்டெம்பர் - 2015**


**தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் பிரஜா அபிலாஷை வலையமைப்பு**

இல.10, மல்வத்த வீதி, நீர்கொழும்பு, இலங்கை.

தொ.பே: +94 312239750 தொ.ந: +94 314870658

மின்னஞ்சல்: nafsosl@gmail.com

இணையத்தளம்: www.nafso-one.org

“இடம் பெயர்ந்த மக்களை சுய கௌரவத்துடன் அவர்களின் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல வழிவிடுங்கள்”


**தேசிய மீனவ ஒத்துழைப்பின் வெளியீட்டு இல :** 49

**முதல் பதிப்பு :** 2015 நவம்பர் 21

**பதிப்பாசியர்கள் குழு :**

| | |
|---|---|
| ஹர்மன் குமார | பிரான்சிஸ் ராஜன் |
| பிரியங்கர கொஸ்தா | அன்டனி ஜேசுதாஸன் |
| லவீனா ஹசந்தி | தீபா சுபாஷிணி |
| பெனடிக் குரூஸ் | என்.இன்பநாயகம் |
| த.வனஜா | எம்.எச்.இஸதீன் |
| ஜூலியஸ் செல்வமலர் | எச்.எம்.ரஹீம் |
| கயான் அம்பேகொட | ஜெயசித்ரா தர்மலிங்கம் |
| சஞ்ஜனா சந்தனதாஸ் | |

**அறிக்கை தயாரிப்பு** : ஆய்வு குழு

**அறிக்கை தொகுப்பு** : ஹர்மன் குமார

**கணனியாக்கம்** : பிரதீப் லக்சிரி

“இடம் பெயர்ந்த மக்களை சுய கௌரவத்துடன் அவர்களின் சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல வழிவிடுங்கள்”

# ஆய்வு அறிக்கை

## யாழ் மாவட்டத்தில் இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் வாழ்க்கையின் உண்மை நிலைமை.

யாழ் மாவட்டத்தில் இடம் பெயர்ந்த நபர்களுடன் இணைந்து தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம் மற்றும் பிரஜா அபிலாஷை வலையமைப்பினால் வெளியிடப்பட்டது

செப்டெம்பர் -2015

## அறிமுகம்

இலங்கை மக்கள் கடந்த 3 தசாப்தங்களில் மிக கொடூரமான யுத்தத்தினை அனுபவித்தவர்கள் மற்றும் யுத்தத்தின் எச்சங்கள் இன்னும் தொடர்ந்த வண்ணம் உள்ளன. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள்(IDPs), காணாமல் போன உறுப்பினர்களைக்கொண்ட குடும்பங்கள், ஊதியம் பெறுவோரை இழந்த, பெண் தலைமைத்துவ குடும்பங்கள் (WHF), ஊனமுற்றோர், பல்வேறு வகையான பாதிப்புக்குள்ளாகிய சமூகங்கள் மற்றும் நாட்டின் தனித்து வாழ்பவர்கள் அனைவரிலும் மிக பாரிய பாதிப்புக்கு உள்ளாகியவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களுமாகும். இவர்கள் பெரும் சிரமத்துக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். யுத்தம் நிறைவடைந்து 6 ஆண்டுகள் கடந்த நிலையிலும் தேசத்தில் கண்ணியத்துடனும் சுய கௌரவத்துடனும் வாழ்ந்த மக்கள் தற்பொழுது ஆதரவற்று மற்றும் விரக்தியடைந்துள்ளனர், அரச அடக்குமுறை பொறிமுறை மிக பாரதூரமானதாக உள்ளமை யுத்த காலத்தை விடவும் யுத்தத்தின் பின்னரான நிலைமை மிகவும் மோசமாக உள்ளது.

நாட்டில் தற்பொழுது உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் இல்லை என கூறுவதற்கும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகளில் உலக நாடுகள் அனைத்திற்கும் பொய்யுரைக்கவும் முன்னய அரசாங்கத்தினால் பயனற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

கருத்து சுதந்திரம் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களை ஒன்றினைக்கும் உரிமை என்பன அனுமதிக்க பட்டிருக்காமையின் காரணத்தினால் அநீதி மற்றும் பொய் பிரச்சாரத்திற்கு எதிராக குரல் எழுப்ப முடியாத சூழ்நிலையில் அமைதியாக இருந்தனர். எனவே, எந்த விதமான நம்பிக்கை உணர்வுமின்றி உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் சிரமங்களை தொடர்ந்தும் எதிர்கொள்கின்றனர். உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் செறிவாக வாழ்வதுடன் மற்றும் சிலர் நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர்.

தற்பொழுது ஐ.நா நிறுவனங்கள், சர்வதேச/அரச சார்பற்ற நிறுவனங்கள், தூதரகங்கள் மற்றும் சமூக இயக்கங்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் பொது நலனுக்காக ஒத்துழைக்க முடியும். இதற்கு ஓர் விரிவான, எல்லோராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க, நடைமுறைப்படுத்தக்கூடிய ஓர் செயற்திறனான திட்டம் காணப்பட வேண்டும். எமது எதிர்பார்ப்பு, உள்ளாட்டில் இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றி அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி ஓர் கண்ணியமான சுயகௌரவத்துடன் ஓர் ஒழுக்கமான வாழ்க்கையை ஏற்படுத்துவதாகும். உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்கள் உள்ளனர் என்பதனை அங்கீகரித்தல் ஓர் முக்கியமான விடயமாகும். இம் மக்களை மீள் குடியேற்றுவதற்கான தேசிய மற்றும் சர்வதேச பங்காளர்களை இணைத்து

செயல்படுத்துவதற்கான மத்தியஸ்தம் வகிக்க வேண்டிய காலம் தாழ்த்திய நேரம் வந்துவிட்டது. கடந்த காலங்களில் ஐ.நா நிறுவனங்கள் கூட, ஓர் மக்கள் கூட்டம் மனித வாழ்வதற்கு பொருத்தமற்ற சூழலுடைய வித்தியாசமான உலகமொன்றில் வாழ்ந்து வருகின்றார்கள் என்பதனை வெளிப்படையாக அங்கீகரிக்க தயக்கம் காட்டியது.

2015 ம் ஆண்டு ஜனவரி மாதம் 8ம் திகதி ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் மக்களின் அரசியல் சூழலில் ஓர் கணிசமான மாற்றம் ஏற்பட்டதுடன் புதிய ஜனாதிபதி அவர்கள் புறக்கணிக்கப்பட்ட உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் இருப்பை ஏற்றுக்கொண்டதுடன், இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை விடுவிக்குமாறு அறிவித்தார். அத்துடன் இடம்பெயர்ந்த சில மக்களை சொந்த இடங்களுக்கு செல்ல அனுமதித்தார். இது எவ்வாறாயினும் உத்தரவாதம் உடைய கட்டளை அல்லது செயற்படுத்தல் வழிகாட்டல்கள் ஊடாக அமைதியான முறையில் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படுவதுடன், அனைத்து மக்களையும் சுதந்திரமாக தமது சொந்த இடங்களில் மீள் குடியேற்றி தமது வாழ்வினை மீள் கட்டியெழுப்ப வழிவகை செய்யப்படல் அவசியமாகும்.

இதே போன்று புதிதாக தெரிவு செய்யப்பட்ட பிரதமர் திரு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2013ம் ஆண்டு இடம்பெயர்ந்த மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் பங்கேற்றியவர் என்ற அடிப்படையில் இடம்பெயர்ந்த மக்களின் நிலைமை பற்றி நன்கு அறிந்தவர். ஆர்ப்பாட்டத்தின் போது இவர் இடம்பெயர்ந்த மக்களின் இருப்பினை உறுதிப்படுத்தியதோடு வடக்கு கிழக்கு பகுதிகளில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகள் குறித்தும் வலியுறுத்தினார். இவை இந்து பத்திரிகையுடனான அவருடைய நேர்காணலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. முகாமில் வாழும் மக்களின் பிரச்சினை மற்றும் அவர்களை அவர்களது சொந்த இடங்களில் மீள் குடியேற்றுவது போன்றவற்றினை வெளிக்கொணர்வதற்கான காலம் இதுவாகும். NAFSO இடம் பெயர்ந்த மக்கள் சமூகத்துடன் கரத்திற்கு கரம் இணைந்து அவர்களை வலுப்படுத்தி, இவர்கள் தமது சொந்த இடங்களில் மனித நேய அடிப்படையில் மீள் குடியேற்றப்படும் வரை போராடும்.

## பின்னணி

1983ம் ஆண்டில் இலங்கையில் உருவாகிய இன பிரச்சினை உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் குறித்த விசேட அவதானத்தினை செலுத்த வேண்டிய நிலையினை தோற்றுவித்துள்ளது. இலங்கை அரசாங்கத்தின் முப்படைகளும் L.T.T.E அமைப்பிற்கும் இடையில் இடம்பெற்ற ஆயுத போராட்டத்தினால் ஏற்பட்ட வாழ்வியல் மற்றும் உடைமைகளின் பாதிப்புக்களினால், வடக்கு கிழக்கு மக்கள் தமது வாழ்விடங்களை விட்டு இடம்பெயர்ந்து முகாம்களில் தஞ்சமடைந்தனர். தற்பொழுது

யாழ் மாவட்டத்தின் வலிகாமம் வடக்கு பகுதி மக்களில் சிலர் வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்திருப்பினும் பலர் முகாம்களிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

1996ம் ஆண்டு, இலங்கை அரசாங்கம் யாழ் மாவட்டத்தின் ஏறத்தாள முழு பகுதியினையும் மீள் கைப்பற்றியிருந்த போதும், இடம்பெயர்ந்த மக்களை தமது சொந்த இடங்களுக்கு மீள் திரும்ப சந்தர்ப்பமளிக்கப்படவில்லை இதே போன்றே வட பகுதி, கிழக்கு மாகாண மக்கள் இடம்பெயர்ந்ததுடன் இன்றும் மீள் குடியேறவில்லை.

2002ம் ஆண்டு சர்வதேச தலையீட்டில் அரசாங்கத்திற்கும் L.T.T.E அமைப்பிற்கும் இடையில் சமமான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டது. இதன் மூலமாக மக்கள் ஓரளவு விடுதலை பெற்று தரை மார்க்கமாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பகுதிகளுக்கு செல்லும், முன்னர் மறுக்கப்பட்டிருந்த வாய்ப்பினைப் பெற்றனர்.

எனினும் 2006ம் ஆண்டில் சமாதான பேச்சுவார்த்தையின் முறிவின் காரணமாக யுத்தம் மீண்டும் தொடங்கியது. இதனைத் தொடர்ந்து, 2005ம் ஆண்டு பதவிக்கு வந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, மனிதாபிமான மீட்பு நடவடிக்கை என்ற பெயரில் யுத்தத்தை தீவிரப்படுத்தி L.T.T.E யை 2009ம் ஆண்டு மே 18ம் திகதி தோற்கடித்து நாடு முழுவதுமான பாரிய சக்தியை பெற்றார். பல தமிழ் மக்கள் யுத்தத்தின் கடைசி சில வாரங்களில் என்றுமில்லாத மிகவும் மிலேச்சத்தனமான கோரமான யுத்தத்தின் தமது அனுபவத்தினை உரைத்தனர். சர்வதேச மனித உரிமை பேரவையின் இலங்கை அரசாங்கத்தின் மீதான அழுத்தம் காணப்பட்ட போதிலும் இக்கோர சம்பவம் இடம் பெற்றது. யுத்த வெற்றியை தமது தேர்தல் வாக்குறுதியாக ராஜபக்ச பயன்படுத்திய போதிலும் , பின்னர் இவரது உபாயங்கள் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்திற்கு எதிரானது என வெளியாகியது.

2009ம் ஆண்டில் 500,000ற்கும் மேலான இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களில் வசித்ததுடன், வடக்கு கிழக்கு மாகாணங்களில் குறைந்தது 84,000 பெண்கள் விதவைகளாக்கப்பட்டுள்ளனர். (LLRC இன் அறிக்கையின் பிரகாரம் 59,000 விதவைகள்)

UNHCR மற்றும் ஏனைய சர்வதேச அமைப்புக்கள் முகாம்களுக்கு மனிதாபிமான நிவாரண உதவிகளை வழங்கியதுடன் மீள்குடியேற்றங்களும் ஆரம்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும் மீள் குடியேற்ற மக்களுடன் கலந்துரையாடியதில், இலங்கை அரசாங்கம் மீள் குடியேற்ற நடவடிக்கைகளின் போது பின்பற்றுவதற்கென தயாரிக்கப்பட்டு தயார் நிலையில் உள்ள பின்வரும் ஆவணங்கள் எதையும் பின்பற்றவில்லை என அறியக்கிடைத்தது. 2004ம் ஆண்டு OCHA உள்நாட்டு இடப்பெயர்வு கொள்கை வழிகாட்டல் (2004 OCHA Guiding Principal on Internal

Displacement Principals) 28 – 30, அகதிகள் மற்றும் இடம் பெயர்ந்தோருக்கான வீடு, சொத்து சீரமைத்தல் கொள்கை (pin herio principals) 2007ம் ஆண்டு மீள்குடியேற்ற கட்டளைச் சட்டம் இல-09, இத்துடன் அரசியல் அமைப்பினால் உள்வாங்கப்பட்டு மீள் குடியேற்ற செயன்முறையின் போது பாதுகாக்கப்பட வேண்டிய அடிப்படை மனித உரிமைகள்.

2011ம் ஆண்டு டிசம்பரில் உருவாக்கப்பட்ட அரச ஆணைக்குழு, கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க அறிக்கையை முன்மொழிந்தது. இதனை நடைமுறைப்படுத்துவது பயனுள்ளது. தொடர்ச்சியாக மீள் குடியேற்றம் மறுக்கப்பட்ட வடக்கு கிழக்கு வாழ் மக்களின் ஒருமைப்பாட்டினை கட்டியெழுப்புவதற்காக 285 பரிந்துரைகளை இவ் அறிக்கை கொண்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தினால் இவ் பரிந்துரைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை.

நாட்டின் ஒருமைப்பாடு மிகவும் விருத்தியடைந்துள்ளது உண்மை போன்று வலியுறுத்துவதாக அரச அறிக்கைகள் அமைகின்றமை அவதானிக்கப்படுகின்றது. முன்னால் பாதுகாப்பு செயலாளர் கோதாபாய மற்றும் அமைச்சர் பசில் இருவரும் 1990 ம் ஆண்டில் இடம்பெயர்ந்த 24 கிராம சேவகர் பிரிவுகளை சேர்ந்த மக்கள் அனைவரும் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர் என அறிவித்தனர். இவ் அறிக்கையினை கருத்திற்கொண்டு மக்கள் தமது சொந்த நிலத்திற்கு திரும்பிய பொழுதும், பாதுகாப்பு படையினரால் அவர்கள் உள் நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இம் மக்கள் அவநம்பிக்கை மற்றும் ஏமாற்றத்துடன் முகாமிற்கு திரும்பினர். மீள்குடியேற்ற அறிவித்தலின் காரணமாக நிவாரண திட்டங்கள் கைவிடப்பட்டது. இவ்வாறு ஒன்றுமில்லா வீட்டிற்கு திரும்பிய மக்கள் மீண்டும் முகாமிற்கு திரும்பிய போது அங்கும் எதுவும் காணப்படவில்லை. இடம் பெயர்ந்த மக்கள் தாம் முகாம்களில் வாழ்வது மிகவும் கடினம் எனவும் பாதுகாப்பு பிரிவினரின் அழுத்தம் தமது வாழ்வினை மேலும் பாதுகாப்பற்றதாக்குகிறது என கூறினர். மேலும் மோசமானது யாதெனின், எந்தவொரு அரச நிறுவனமும் முகாம்கள் தொடர்பான தகவல்களை வெளியிட தடைசெய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் தம் நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுவதனை விரும்பவில்லை.

மேலும் வடுக்களுக்கு அவமானத்தை சேர்த்து, இலங்கை அரசின் பிரதிநிதிகள் ஐ.நா மனித உரிமை சபையின்,2012 செப்டெம்பர் 26ம் திகதிக்கு பின்னர் எந்த ஒரு முகாமும் நாட்டில் இல்லை என கூறியுள்ளனர்.

இந்த சூழ்நிலையில் அரசாங்க சூழலில் யதார்த்தங்களை வெளிப்படுத்த யாரும் தைரியமாக முன்வரவில்லை. முகாம் தலைவர்களுக்கும், சிவில் சமூக அமைப்புகளுக்கும் அரச புலனாய்வு சேவை மற்றும் குற்றவியல் விசாரனை திணைக்களத்தினதும் பாரியளவிலான பல்வேறுபட்ட அச்சுறுத்தல்கள்

விடுக்கப்பட்டன. எவ்வாறாயினும் NAFSO போன்ற பல்வேறு சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து, வலிகாமம் வடக்கு, திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர், மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் மற்றும் பள்ளிமுனை, அம்பாறை மாவட்டத்தில் திராய்க்கேணி மற்றும் பாணம ஆகிய பிரதேச முகாம்களில் உள்ள இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் மனித உரிமை, நில உரிமைக்கான குழுக்களுடன் இணைந்து, இடம் பெயர்ந்த மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான பொதுவான திட்டமொன்று தொடங்கப்பட்டது. பதவியில் இருந்த பிரதமரின் 2013ம் ஆண்டு பெப்ரவரி 15ம் திகதி தெல்லிப்பளை வருகையின் போது, வட பகுதியில் உள்ள மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என கூறினார். இது அனைவரது கவனத்தையும் இதன்பால் கொண்டுவந்தது. எனினும் இதனை தெற்கு இன வாதிகள், நாட்டை பிளவுபடுத்தும் செயலாக பரப்புரை செய்தனர்.

யாழ் உதயன் பத்திரிகை அலுவலகம் தீயிட்டு எரிக்கப்பட்ட சம்பவத்தினை நினைவுபடுத்துவது அவசியமாகும். முகாமில் வாழும் மக்கள் மீள் குடியேற்றப்படாத நிலையில் வடக்கின் வசந்தம் திட்டத்தின் ஊடாக யாழ் மாவட்ட உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப்பட்டன. இதற்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். மேலும் இந்த எதிர்ப்பு போராட்டத்தின் மூலம் இடம் பெயர்ந்த மக்களின் பூர்வீக காணிகளில் உல்லாச விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளமை மற்றும் கீரிமலை தொடக்கம் தொண்டமானாறு வரையில் 11 கி.மீ கடற்கரை மீனவர்கள் பயன்பாட்டிற்கு தடைசெய்யப்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இவ் எதிர்ப்பு போராட்டம் கூட நீதி மன்றத்தினால் தடைசெய்யப்பட்டது. எனினும் இவ் போராட்டம் யாழ். வீரசிங்கம் அரங்கில் நடத்தப்பட்டது.

## புதிய எதிர்பார்ப்புக்கள்

புதிய நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புடன் கடந்த ஜனவரி 8ம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பதவிக்கு கொண்டுவருவதில், யாழ் இடம்பெயர்ந்த சமூகத்தின் பங்களிப்பு பாரியதாகும். இவ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் அவரது 100 நாட்கள் வேலைத்திட்டத்தில் உள்வாங்கப்படவில்லையாயினும் சிவில் பிரதிநிதி ஒருவர் வட மாகாண ஆளுனராக நியமிக்கப்பட்டமை, முகாம்களில் வாழும் மக்கள் மீதான இராணுவ அழுத்தம் குறைக்கப்பட்டுள்ளமை, மீள் குடியேற்ற அமைச்சினால் இன்றும் இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களில் வாழ்கின்றனர் என்பதனை ஏற்றுக்கொண்டமை, யாழ் மாவட்டத்தில்1200 ஏக்கர், திருகோணமலை மாவட்டத்தின் சம்பூரில் 818 ஏக்கர், அம்பாறை மாவட்டத்தின் பாணமவில் 340 ஏக்கர் காணிகளை மீள் குடியேற்றத்திற்காக விடுவிக்க தீர்மாணிக்கப்பட்டுள்ளமை போன்ற நேர் மறை விளைவுகளை காணக்கூடியதாக உள்ளது.

புதிய அரசாங்கத்தினால் 2015ம் ஆண்டு ஜனவரி 30ம் திகதி அளவில் யாழ் மாவட்டத்தில் 38 முகாம்களில் 1318 குடும்பங்களைச் சேர்ந்த 4747 இடம் பெயர்ந்த மக்கள் வாழ்கின்றனர் என ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வானது, முகாம்களுக்கு சென்று அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி முன்னய அரசாங்கத்தின் உண்மைக்கு புறம்பான பிரச்சாரத்தின் பொய்மைத் தன்மையை எடுத்துரைக்க உதவியது.

இவ் ஆய்வின் யாழ் மாவட்டத்தில் இடம் பெயர்ந்து வாழும் மக்கள் தொடர்பான விபரங்கள் மட்டுமே கருத்திற் கொள்ளப்பட்டுள்ளதுடன் திருகோணமலை, மன்னார், அம்பாறை, கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் முகாம்கள் காணப்படுகின்றமையை நாம் மறந்துவிடக்கூடாது. சர்வதேசத்தால் அங்கீகரிக்கப்பட்ட முறைகளில் இம் மக்களின் அடிப்படை உரிமைகளை வழங்கி அவர்களை மீள்குடியேற்றுவது அரசின் தலையாய பொறுப்பாகும். இதே போன்று உறவினர்களின் வீட்டில் வாழ்ந்து வரும் இடம் பெயர்ந்த மக்களையும் மறக்கலாகாது.

மீள்குடியேற்ற அமைச்சின் கருத்தின்படி 12115 குடும்பங்களைச் சேர்ந்த 39361 இடம்பெயர்ந்த மக்கள் உள்ளனர் : (மூலம் மீள்குடியேற்ற அமைச்சு). இதனுடன் இந்தியாவில் வாழும் இலங்கை அகதிகளையும் கணக்கில் எடுக்க வேண்டும்.

சென்னை உதவி உயர்ஸ்தானிகரின் தகவலின் படி, 110 முகாம்களில் 19,916 குடும்பங்களைச் சேர்ந்த 67,436 பேரும், உறவினருடன் 102,000 பேரும் அகதிகளாக வாழ்கின்றனர். 2011ம் ஆண்டு ஜூலை மாதம் 31ம் திகதி வரையில் 43,411 பேர் நாடு திரும்பியுள்ளனர்.(தகவல்-சென்னை உதவி உயர்தானிகர்)

இவ் ஆய்வானது, 2015ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17ம் திகதி ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கத்திற்கு, இடம் பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடத்தில் குடியமர்த்தி அவர்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத்தருவதற்கு தேவையான நடவடிக்கைக்கு அவசியமான பின்னணியை வழங்குவதே நோக்கமாகும்.

## ஆய்வு அறிக்கையின் நோக்கங்கள் :

### பிரதான நோக்கம் :-

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் இடம் பெயர்ந்த மக்களின் நில உரிமையினை அடையாளப்படுத்தல்,அத்துடன் இடம்பெயர்ந்த மக்களின் உடனடி மீள் குடியேற்றத் தேவை, அடிப்படைத் தேவை மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பாதுகாப்பினைக் கண்டறிவது.

### குறிப்பிட்ட நோக்கம் :

1. யாழ் வளைகுடாவில் புறக்கணிக்கப்பட்ட 41 முகாம்களில் வாழும் மக்களின் சுய விபரங்களை, இடம் பெயர்ந்த மக்களின் மற்றும் முகாம் வாசிகளின் உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு திரட்டுதல்.

2. இடம் பெயர்ந்த மக்கள்/முகாம் வாசிகளின் விஷேடமாக பெண் தலைமை குடும்பங்களின் நுண்ணறிவு மற்றும் உணர்வுகளை பெற்றுக்கொள்ளல்.

3. இடம் பெயர்ந்த மக்கள்/முகாம் வாசிகளுக்கான உடனடி மீள்குடியேற்றம் மற்றும் நீண்ட கால அடிப்படையிலான வலுவூட்டப்பட்ட வாழ்க்கைக்கான நிலையான தீர்வுகளுக்கான அபிலாஷைகள் மற்றும் பரிந்துரைகளை பெற்றுக்கொள்ளல்.

விரைவான பங்கேற்பு ஆய்வு அறிக்கை மூலமாக பெறப்படும் தரவுகள் மற்றும் தகவல்கள் மிகவும் அவசியமானதும் ஓர் கருவியும் ஆகும்.

வட மாகாணத்தில் யாழ் வளைகுடாவில் புறக்கணிக்கப்பட்ட 41 முகாம்களில் வாழும் மக்களின் அனுபவங்கள் மற்றும் நிலமைகளை இவ் அறிக்கையினை வாசிப்பவர்கள் மற்றும் அனைத்து பங்கு தாரர்களுக்கும் அறிவித்தல்.

- இடம் பெயர்ந்த மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் தீர்க்கப்படாமல் காணப்படும் நில பிரச்சினையை தீர்ப்பது தொடர்பான ஓர் விரிவான திட்டத்தினை வகுத்து இதனுடன் தொடர்புடைய கொள்கை வகுப்பாளர்களுக்கு முன்வைத்தல்.

- நாட்டின் புதிய தலைவர் மற்றும் பிரதமர்/மீள் குடியேற்ற அமைச்சர்/பெண்கள் விவகார அமைச்சர் ஆகியோரை அணுகி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகணங்களில் வாழும் இடம் பெயர்ந்த மக்களின் நில உரிமை தொடர்பாக கலந்துரையாடல்

- சிவில் சமூக அமைப்புக்கள், தூதுவராலயங்களுடன் இணைந்து இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நில உரிமை தொடர்பான ஒன்றிணைந்த பிரச்சார நடவடிக்கைகளை வலுப்படுத்தல்.

- இடம் பெயர்ந்த மக்கள்/பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நில பிரச்சனைகளை தீர்ப்பதற்கு பிராந்திய ஒத்துழைப்பினை பெறல், தென் ஆசிய வறுமை ஒழிப்பு கூட்டணி மற்றும் பல்வேறு பிராந்திய,சர்வதேச சமூகத்துடன் இணைந்து செயற்படல்.

- மிகுதியுள்ள இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்தினை துரிதப்படுத்துவதற்கான தலையீட்டினை முன்வைத்தல்

## முகாமின் நிலைமைகள்

1990ம் ஆண்டில் இருந்து வலிகாமம் வடக்கு மக்கள் பல்வேறு இடங்களில் பல்வேறு விதமாக வாழ்ந்து வருகின்றனர். அனேகமானோர் “நலன் புரி நிலையம்” என்று அழைக்கப்படும் முகாம்களில் வசிக்கின்றனர். தற்போதைய அரசாங்க தகவல்கள் மூலத்தின் அடிப்படையில், 2015ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதிக்கு முன்வரை யாழ்பாணத்தில் 38 நலன்புரி நிலையங்கள் அமைந்திருந்தன. எவ்வாறாயினும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை இதனை விடவும் அதிகமாகும். மற்றும் யாழ் குடா நாட்டில் பல கிராமங்களில் இடம் பெயர்ந்த குடும்பங்கள் வாழ்கின்றன. எமது மூன்று நாள் ஆய்விற்கான விஜயத்தின் போது, யாழ் குடாநாட்டில் உள் நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் வாழும் 5 கிராமங்கள் அடையாளம் காணப்பட்டது. மேலும் பல இடம் பெயர்ந்த மக்கள் நாடு முழுவதும் ஆங்காங்கு வாழ்ந்து வருகின்றனர்.

எமது ஆய்வின்படி, யாழ்குடா நாட்டில் வலிகாமம் வடக்கின் 15 கிராம சேவகர் பிரிவுகளான தெல்லிப்பலை, உடுவில், சந்திரிபாலை, கோப்பாய், பருத்திதுறை மற்றும் நல்லூர் செயலகத்திற்கு உட்பட்ட 1536 இடம் பெயர்ந்த குடும்பங்கள் தற்பொழுது 27 கிராம சேவகர் பிரிவுகளில் உள்ள 38 முகாம்களில் வசித்து வருகின்றனர். இவற்றில் 35 முகாம்கள் 1990ம் ஆண்டுகளில் இருந்தே காணப்படுகின்றது.

அடையாளம் காணப்பட்ட மேலும் பல இடம் பெயர்ந்த மக்கள் 5 கிராமங்களில் அசல் கிராம மக்களின் இருப்பிடங்களுக்கு அருகில் தற்காலிக குடிசைகளிலும் மேலும் சிலர் கடற்கரையை அண்டி கொட்டில்களிலும் வாழ்கின்றனர். மேலும் பலர் வாடகை வீடுகளில் வசிக்கின்றனர்.

அட்டவனை இல 01ல், நெடுவரிசை 6ல் அரசாங்க மூலாதாரத்தில் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது. இத் தரவு குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. இதன் காரணம், கிராம வாசிகளின் தகவலின் படி இங்கு வாழ்பவர்களின் எண்ணிக்கை மாறுபட்டதாக உள்ளது. உதாரணமாக அட்டவணை 01ல் கிருஸ்ணர் கோவில் முகாமில் பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 78 ஆகும். எனினும் முகாம் மக்களிடம் அறியக்கிடைத்த எண்ணிக்கை 65 ஆகும். இதே நேரம் கட்டுடை 3 முகாமில் பதியப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை 2 ஆகும், எனினும் இங்கு 10 குடும்பங்கள் வாழ்கின்றனர். மறுபுறம், ஆய்வு காலப்பகுதியில் முகாம்களில் வாழ்ந்தவர்களின் எண்ணிக்கை மிக குறைவாகும்.

## அட்டவணை இல – 01 முகாமின் பொது தகவல்

***- அரசாங்கம் - மூலாதாரம்  # - NAFSO – ஆய்வு**

| இல | மாவட்ட செயலக பிரிவு | முகாமின் பெயர் * # | தற்போதைய GN பிரிவு * | இடம்பெயர்விற்கு முன் GN பிரிவு * | பதிவு செய்யப்பட்ட குடும்பங்கள் * | தற்போது முகாமில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை # | குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை # | கூட்டுக் குடும்பங்களின் எண்ணிக்கை # | மீள்குடியேறிய நபர்களின் எண்ணிக்கை # | முகாமில் உருவாக்கிய ஆண்டு * |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தெல்லிப்பளை | தும்பு தொழிற்சாலை ந.நி | J/212 | J/246 | 17 | 17 | 85 | - | - | 1999 |
| 2 | தெல்லிப்பளை | நீதவான் இல்லம் | J/213 | J/255 | 60 | 58 | 58 | | 2 | 1990 |
| 3 | தெல்லிப்பளை | ஊரணி ந.நி | J/214 | J/247 | 32 | 30 | 130 | - | 2 | 1990 |
| 4 | தெல்லிப்பளை | கோணட்புலம் | J/214 | J/246 | 201 | 201 | 668 | - | - | 1990 |
| 5 | தெல்லிப்பளை | அளவெட்டி கிழக்கு ந.நி | J/217 | J/247 | 23 | 23 | 66 | - | - | 2002 |
| 6 | தெல்லிப்பளை | பிள்ளையார் ந. நி | J/218 | J/240 | 10 | 10 | 42 | - | - | 2004 |
| 7 | உடுவில் | பெரிய மதவடி ந.நி | J/196 | J/246 | 21 | 22 | 84 | 1 | - | 1990 |
| 8 | உடுவில் | பிள்ளையார் ந. நி /இக்கிரானை-01 | J/199 | J/236, J/250 | 32 | 43 | 172 | 11 | - | 1990 |
| 9 | உடுவில் | இக்கிரானை-02 ந.நி | J/200 | J/226 | 9 | 10 | 31 | 1 | - | 1995 |
| 10 | உடுவில் | கண்ணகி ந.நி | J/196 | J/246, J/247, J/248, J/249, J/250 | 101 | 153 | 600 | 52 | - | 1990 |
| 11 | உடுவில் | சபாபதிப்பிள்ளை ந.நி | J/196 | J/246 | 121 | 114 | 340 | - | 7 | 1992 |

| இல | மாவட்ட செயலக பிரிவு | முகாமின் பெயர் * # | தற்போதைய GN பிரிவு * | இடம்பெயர்விற்கு முன் GN பிரிவு * | பதிவு செய்யப்பட்ட குடும்பங்கள் * | தற்போது முகாமில் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை # | குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை # | கூட்டுக் குடும்பங்களின் எண்ணிக்கை # | மீள்குடியேறிய நபர்களின் எண்ணிக்கை # | முகாம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு * |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 12 | சண்டிலிப்பாய் | இனுவில் மில் ந.நி | J/190 | J/ | 1 | 5 | 20 | 4 | - | 1990 |
| 13 | | சிந்து ந.நி | J/187 | | 10 | 16 | 42 | 6 | - | 2000 |
| 14 | | இலந்தையடி ந.நி | J/185 | J/237 | 14 | 16 | 89 | 2 | - | 2001 |
| 15 | | நீதவான் ந.நி | J/185 | J/247 | 21 | 14 | 47 | - | 7 | 1990 |
| 16 | | ஆலடி ந.நி | J/185 | | 11 | 22 | 97 | 11 | - | 1990 |
| 17 | | மடகச்சி ந.நி | J/184 | | 2 | 2 | 12 | - | - | 1990 |
| 18 | | கட்டுடை 01 | J/140 | | 4 | | | முகாம் இல்லை | 4 | 1990 |
| 19 | | கட்டுடை 02 | J/140 | J/246 | 12 | 10 | 32 | - | 2 | 1992 |
| 20 | | கட்டுடை 03 | J/140 | J/260 | 2 | 10 | 49 | 8 | - | 2000 |
| 21 | | கொம்பனிப்புலம் | J/144 | J/256 | 5 | 5 | 23 | - | - | 1997 |
| 22 | | சண்டிலிப்பாய் GTMS | J/144 | J/250 | 11 | 3 | 15 | - | 8 | 1990 |
| 23 | கோப்பாய் | கிருஸ்ணர் கோவிலடி ந.நி | J/265 | J/241 | 78 | 65 | 300 | | 20 | 1993 |
| 24 | | இந்துகல்லூரி ந.நி | J/266 | J/241 | 33 | 35 | 132 | 2 | 7 | 1995 |
| 25 | | யோகபுரம் ந.நி | J/265 | J/237 | 61 | 58 | 236 | - | 23 | 1992 |
| 26 | | இழுப்பையடி (A) ந.நி | J/265 | J/240 | 55 | 20 | 165 | - | 8 | 1995 |
| 27 | கோப்பாய் | இழுப்பையடி (B) ந.நி | J/265 | | | 26 | | - | - | 1995 |
| 28 | | செல்வபுரம் ந.நி | J/265 | J/254 | 30 | 32 | 129 | 2 | 17 | 1992 |
| 29 | கரவெட்டி | உடுப்பிட்டி தெற்கு ந.நி | J/354 | | 15 | 19 | 71 | 4 | - | 1990 |
| 30 | | சின்னக்காலனி ந.நி | J/353 | | 5 | முகாம் இல்லை | | - | 5 | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 31 | | K.K.S ந.நி | J/393 | J/254 | 8 | 10 | 39 | 2 | - | 2005 |
| 32 | | சின்னாவலை ந.நி | J/410 | J/254, J/255 | 46 | 43 | 174 | - | 3 | 1990 |
| 33 | | சுப்பர் மடம் ந.நி | J/393 | J/251, J/255 | 75 | 47 | 126 | - | 28 | 1990 |
| 34 | பருத்தித்துறை | ஆனைக்குட்டி ந.நி | J/399 | J/248 | 69 | 41 | 148 | - | - | 1990 |
| 35 | | நிலவன் ந.நி | J/398 | J/255 | 42 | 45 | 172 | 3 | - | 1991 |
| 36 | | பாலாவி ந.நி | J/394 | J/254 | 52 | 53 | 237 | 1 | - | 1992 |
| 37 | | சக்கோட்டை ந.நி | J/394 | J/284 | 11 | 10 | 58 | - | 1 | 1990 |
| 38 | | திக்கம் | J/398 | J/251, J/248, J/216, J/254, J/255 | | 64 | 248 | - | 56 | 1990 |
| 39 | | ஓடக்கரை | J/397 | | | 7 | 45 | - | - | |
| 40 | பருத்தித்துறை | பருத்தித்துறை (கோட்டடி) | J/401 | J/254 | | 25 | 202 | - | - | 1990 |
| 41 | | பருத்தித்துறை முனை | J/403 | J/248, J/246, J/251 | | 100 | 482 | - | - | 1990 |
| 42 | | இன்பாசிட்டி | J/398 | J/251 | | 35 | 135 | - | - | 1990 |
| 43 | நல்லூர் | காரைக்கால் ந.நி | J/117 | J/240 | 12 | 17 | 62 | 5 | - | 1992 |
| | | மொத்தம் | | | 1312 | 1536 | 5863 | 115 | 200 | |

மேலே கூறப்பட்ட இடமாற்ற நிலைமை காரணமாக பின்வரும் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் அரசியல் பிரச்சினைகளை இடம் பெயர்ந்தோர் முகம் கொடுக்கின்றனர்.

## பொருளாதார பிரச்சினை :-

இடம் பெயர்ந்த மக்கள் தமது கிராமங்களிலேயே மீன்பிடி மற்றும் விவசாய நடவடிக்கைகளை தமது பிரதான வருமான மார்க்கமாக கொண்டிருந்தனர். அக் காலத்தில் தமது சொந்த நிலத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொண்டனர். மீனவர்கள் தமது சொந்த படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டனர். குடும்பப் பெண்களும் வருமானம் பெறும் செயல்களில் ஈடுபட்டதனால் குடும்பப் பொருளாதாரம் நிலையானதாக காணப்பட்டது. இதன் காரணமாக குடும்ப சுமை குறைந்து சொந்த வருவாயில் வாழும் சமூகமாக தமது சொந்த கிராமங்களில் வாழ்ந்தனர். எவ்வாறாயினும் இடம்

பெயர்வு மற்றும் முகாம் வாழ்க்கையானது இவர்களது வாழ்வினை பரிதாபகரமான நிலைக்கு தள்ளியுள்ளது. சுயதொழிலை வருமான மார்க்கமாக கொண்டிருந்த மக்கள் தற்பொழுது அன்றாட கூலித்தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிலர் மேசன், தச்சன், மீன் வியாபாரி, சிறிய பெட்டிக் கடை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். தற்பொழுது ஆண்கள் 1000.00 ரூபாவை நாளாந்த சம்பளமாகவும், பெண்கள் 350.00 – 500.00 ரூபாய் வரையில் மட்டுமே பெறுகின்றனர். இவர்களின் மொத்த குடும்ப வருமானம் சராசரியாக 21,000.00 ரூபாய் தொடக்கம் 25,000.00 ரூபாய் வரையானதுடன், மாதாந்த குடும்ப செலவீனம் 25,000.00 தொடக்கம் 30,000.00 ரூபாவை விட அதிகமாகும். 5 பிள்ளைகளை கொண்ட குடும்பங்களின் மாதாந்த செலவு 45,000.00 ரூபாவை விட அதிகமாகும். இவ் குறை வருமான நிலை காரணமாகவே இக் குடும்பங்களின் கடன் சுமை மாதாந்தம் அதிகரித்து வருகின்றது.

பெண்கள் தலைமை தாங்கும் (WHF) குடும்பங்களின் பொருளாதார நிலை மிகவும் தாழ்வானதாகும். இதற்கு காரணம், ஆண்களை போலவே பெண்கள் சமமான வேலை புரியினும் குறைவான சம்பளம் பெறல் மற்றும் பாரபட்சம் காட்டப்படுகின்றமை ஆகும். பெண்கள் சராசரியாக 350.00 -500.00 ரூபாய் நாளாந்த வருமானம் பெறுகின்றனர். இது குடும்பத்தை நடாத்த போதாதுள்ளது. அத்துடன் நாளாந்த மற்றும் வழக்கமான வேலை கிடைப்பதில்லை. மாதாந்தம் 15 – 18 நாட்களுக்கு மட்டுமே வேலை கிடைக்கின்றது. இடப்பெயர்வு, வறுமை காரணமாக பாராபட்சமான வேதனத்திற்கு வேலைக்கு தள்ளப்படுகின்றனர். வருமானம் காணப்பட்ட போதிலும் வாழ்க்கை தரம் மேம்படவில்லை. குடும்ப பொருளாதார பிரச்சினை மேலும் விரிவடைந்து வறுமை நிலை ஏற்படுகின்றது. உதாரணமாக பெண்கள் அரிசி, பருப்பு, கருவாடு, குழம்பு பொடி, சமையல் எண்ணெய் மற்றும் தேங்காய் போன்றவற்றினை வாங்கினாலும் அவை பிள்ளைகளுக்கு போதிய ஊட்டச்சத்தினை கொண்டவையல்ல. போஷாக்கு குறைவினால் பிள்ளைகள் நோய்வாய் படுவதுடன் பாடசாலையிலும் திறன்பட செயற்பட முடிவதில்லை. வறுமை தொடர்கின்றது.

உதாரணமாக பாலாவி முகாமில் எமது ஆய்வு மாலை 3.00 மணியளவில் நிறைவடைந்த பின்னர், நாம் 10 வயது சிறுவன் ஒருவனை சந்தித்தோம். நாம் அவனிடம் “மதிய உணவு உண்டாயா? என வினவினோம். ஆனால் அச் சிறுவன் பதிலளிக்க தயங்கினான். அவனை அணுகி சற்று நட்பாக கதைத்ததன் பின்னர் அவன் “இல்லை. எனது வீட்டில் இன்று சமைக்கவே இல்லை” என்றான். நாம் சந்தித்த அநேகரின் பதில்களும் இதற்கு ஒத்ததாகவே அமைந்தது. உதாரணமாக நீதவான் முகாமில் ஒரு பெண்ணை நாம் வினவிய போது அவள் எதையும் சமைக்க வில்லை. மற்றுமொரு குடும்ப பெண் கூறியது “அநேக நாட்களில் நாம் பகல் உணவு எதையும் உண்பதில்லை, எனது பிள்ளைகள் இன்று ஒன்றும் உண்ணவில்லை”.

எவ்வாறாயினும் எமது நேர்காணலின் போது இக் குடும்பத் தலைவன் குடி போதையுடன் வந்தடைந்தார்.

## சமூக – கலாச்சார பிரச்சினைகள்

நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் தமது சொந்த நிலத்தில் வாழ்ந்தபொழுது கௌரவமாகவும், சுதந்திரமாகவும் வாழ்ந்ததாக கூறினர். எவ்வாறாயினும் இந் நிலை தற்பொழுது மாறிவிட்டது. இன்று மிகவும் நெரிசலான குறுகிய சிறிய நிலத்தில் வாழ்கின்றனர். பல குடும்பங்கள் சிறிய நிலப்பரப்பில் செறிவாக வாழ்வதுடன், குறைந்த எண்ணிக்கையான மலசலகூடங்கள் மற்றும் தண்ணீர் வசதிகளை பகிர்ந்து வருகின்றமை, பெண்கள், இளம் பெண் பிள்ளைகளின் தனிப்பட்ட செயல்கள் பாதிக்கின்றன. அண்டைய கிராமங்களில் வாழும் மக்கள் மற்றும் அசல் கிராம மக்களால் “அகதிகள்” என தரம் குறைவாக நடத்தப்படுகின்றனர். ஏனையவர்களைப் போன்று சுதந்திரமாக செயற்பட முடியாததுடன் தமது இன்ப துன்பங்களை வெளிப்படையாக பகிர்ந்து கொள்ள முடியாது உள்ளனர். தேர் திருவிழாக்களில் பங்கேற்க முடியாது சமனற்று நடாத்தப்படுகின்றனர். எனினும் வரிசையில் நின்று வழிபாடுகளை மேற்கொள்ளலாம்.மரண சடங்குகளில் கூட இவர்களால் சாதாரண வழமைகளை பின்பற்ற முடியாது. இடம் பெயர்ந்து மக்கள் தமது உறவுகளின் இறுதிக் கிரியைகளை 1 ½ நாட்களுக்குள் மேற்கொள்ள வேண்டும் மாறாக அசல் கிராமத்தவர்கள் தமது இறுதி சடங்குகளை மூன்று நாட்கள் வரை தொடரலாம். ஏனைய பெண்களைப் போன்று பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பெண்கள் சமமாக, கௌரவமமாக நடாத்தப்படுவதில்லை.

பெண் தலைமைத்துவ குடும்ப உறுப்பினர்கள் வலையல்கள், அட்டிகை மற்றும் அழகான புடவை அணிந்து வெளியில் செல்லும் போது, ஏனைய முகாம் உறுப்பினர்களால் இவர்கள் உடம்பை விற்று பணம் சம்பாதிக்க செல்வதாக குற்றம் சுமத்துகின்றனர். எமக்கு பேட்டியளித்த ஒருவர் கூறியது “மக்கள் நாம் என்ன செய்கிறோம் என்பதறிய மிகவும் ஆர்வம் காட்டுகின்றனர். எமது குடும்ப விடயமாக பிரதேச செயலக அலுவலகத்திற்கு சென்றாலும் நாம் விபச்சாரத்தில் ஈடுபடுவதாக சந்தேகிக்கின்றனர். இது மிகவும் வருத்தமான நிலையாகும்.

“எமது இறப்பிற்காக சொந்த இடத்திற்கு திரும்ப வேண்டும். எமது சொந்த நிலத்தில் உயிரை விட வேண்டும் அப்போதுதான் எமது இறுதி கிரியைகளுக்கு அதிக மக்கள் வருவார்கள்” (எஸ்.லட்சுமி, வயது-87, சிவபுரம் (முகாம்)



முகாம் வாழ் கவலையடைந்த பெண்



சிறுவர்கள் நாட்டின் எதிர்காலம்



எதிர்பார்ப்புடன் இடம் பெயர்ந்த
குடும்பங்கள் - யாழ்ப்பாணம்.

அதே நேரத்தில் பல பெண்கள், தமது திருமண வயதை அடைந்துள்ளனர். தனிமைப்படுத்தப்பட்டுள்ளமை, வேறுபட்ட முகாம் வாழ்க்கை, மற்றும் சீதனம் செலுத்த இயலாமை போன்ற காரணங்களினால் வெளிக்கிராமங்களில் இருந்து இவ் இளம் பெண்களுக்கு வரன் கிடைப்பதில்லை. எனினும் முகாம்களில் இளவயது திருமணம் ஓர் பொதுவான அம்சமாகும்.

முகாம் வாழ் ஆண்களின் மது வெறியாட்டம் மற்றும் தவறான நடத்தை சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் உளவியல் நல்வாழ்வை பாதிக்கின்றது. இவ் ஆண்கள் முகாம் வட்டாரத்திற்குள் பயத்தினை ஏற்படுத்துகின்றனர். எவ்வாறாயினும் பாலியல் தொல்லை இளம் பெண்களின் பிரச்சினை மற்றுமல்ல. இது இளம் வயது ஆண் பிள்ளைகளினதும் பிரச்சினையாகும். நீதவான் முகாமில் ஓர் சம்பவம் பதிவாகியுள்ளது. ஓர் இடம் பெயர்ந்த முகாம் வாசியின் செயற்பாட்டினால் குறித்த இளைஞன் திருமண செயற்பாட்டின் கடைசி தருவாயில் திருமணத்தை நிறுத்திவிட்டான். மொத்தத்தில் இடம் பெயர்ந்த கிராம மக்களை அசல் மற்றும் அண்டைய கிராம மக்கள் மதிப்பளிப்பதில்லை. இதன் தாக்கம் முகாம் குடும்பங்களின் உளவியல் பாதிக்கப்படுவதனால் தமது ஆளுமை பாதிப்படைந்து தமது வாழ்க்கையை தாமே உயர்த்திடும் உரிமைக்காக போராடும் வலிமையை இழக்கின்றனர்.

“எமது பிள்ளைகளுக்கு திருமண வரண் வருவதில்லை. நாங்கள் அகதிகள் என்பதனால் பாரபட்சம் காட்டுகின்றனர்” ( ராதா-யோகபுரம் முகாம்)

## அரசியல் பிரச்சினைகள்

கடந்த 25 வருடங்களாக மீள்குடியேற்றத்திற்கான தெளிவான நடவடிக்கை ஒன்றும் இல்லாமல், அரசியல் வாதிகள் இடம்பெயர்ந்த முகாம் மக்களை அணுகி வருகின்றனர். தேர்தல் காலங்களில் மட்டும் அரசியல் வாதிகள் இவர்களிடம் வருகின்றனர்.

“அவர்கள் எமது வாக்குகளை அபகரிப்பவர்கள். அவர்களிடம் மக்களின் நிலங்களை மீளப்பெறுவதில், முகாம் மக்களின் அடிப்படை வசதிகளை பெறுவதில் மற்றும் தமது இலட்சியங்களை அடைவதில் எவ்வித அரசியல் உணர்வு மற்றும் அர்ப்பணிப்பு கிடையாது. பல்வேறுபட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையினால் மக்கள் அரசியல் வாதிகளை வெறுப்பதுடன் நம்பிக்கை இழந்துள்ளனர். இவர்கள் விஷேடமாக இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை தொடர்பில் அரசியல் வாதிகள் மீது குற்றம் சுமத்துகின்றனர். 25 வருடங்களின் பின் தமது சொந்த நிலத்திற்கு செல்ல அனுமதிப்பதற்கு இதுவே சரியான காலம் என எம்மிடம் கூறினர்.

சுதந்திரமான ஓர் அமைப்பின் ஊடாக தமது எதிர்காலத்தை கட்டியெழுப்ப வேண்டிய தேவை உள்ளது என இடம் பெயர்ந்த மக்கள் வெளிக்காட்டினர். தற்போது அவ்வாறான செயன்முறை ஒன்றும் கிடையாது. கடந்த காலங்களில் இராணுவ தலையீட்டின் காரணமாக மக்களின் செயற்பாடுகள் நடு நிலையானதுடன் மக்களின் குரலும் அடக்கப்பட்டது.

அரசியல் சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் தொடர்பில் இடம் பெயர்ந்த மக்களின் கருத்து என்ன? என ஆய்வுக்குழு மக்களிடம் வினாவிய பொழுது, அவர்கள் இக்குழுக்களின் தலையீட்டினை மிகவும் வேதனையுடன் எதிர்த்தனர். இதற்கு காரணம், இம்மக்கள் சர்வதேச/அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட பல்வேறு அளவீடுகள், மற்றும் நேர்காணல்களுக்கு பதிலளித்துள்ளனர் எனினும் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றமும் அவர்களது வாழ்வில் இடம்பெறவில்லை என்பதனாலாகும்.

எமது தற்போதைய ஆய்வு குறித்து உங்கள் கருத்து என்ன என வினாவிய போது, அவர்கள் பதில் எமக்கு மிகவும் சவாலாக அமைந்தது. “இவ் ஆய்வு ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆய்வு போன்ற ஒன்றுதான் என எமக்கு தெரியாது. இல்லையெனில் எமது தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஓர் செயற்றிட்டத்தினை மேற்கொள்ளாவிடின், இதுவும் ஓர் பயனற்ற முயற்சி மற்றும் காலத்தின் வீண் விரயம் என நினைக்கின்றோம்.”

தற்போது இடம் பெயர்ந்த முகாம் மக்களின் மீள்குடியேற்றம், வாழ்வாதாரங்களை புதுப்பிக்க மற்றும் அபிவிருத்தி மேம்படுத்தல் செயற்பாட்டில் மீண்டும் ஈடுபட பேச்சுவார்த்தைக்கான வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான எமது வாய்ப்பு இதுவாகும்.

## அட்டவணை -02 முகாம்களில் காணப்படும் அடிப்படை வசதிகள்

| இல | மாவட்ட செயலக பிரிவு | முகாமின் பெயர் | குடும்பங்களின் எண்ணிக்கை | குடிநீர் | மின்சாரம் | பாதுகாப்பு | சுகாதாரம் | நிலத்தின் அளவு (1 பரப்பு = 10 பர்சஸ்) | காணி உரிமை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | தனியார் எனின் வெளிநாடு /உள்ளூர் | அரசு | ஏனைய |
| 1 | தெல்லிப்பளை | தும்பு தொழிற்சாலை ந.நி | 17 | W | VW | N | W | 15 | உள்ளூர் | | |
| 2 | | நீதவான் இல்லம் | 58 | S | Y | Y | S | 20 | உள்ளூர் | | |
| 3 | | ஊரணி ந.நி | 30 | S | N | N | W | 20 | உள்ளூர் | | |
| 4 | | கோணட்புலம் | 201 | S | Y | N | W | 84 | தெரியாது | | |
| 5 | | அளவெட்டி கிழக்கு ந.நி | 23 | W | W | N | W | 10 | உள்ளூர் | | |
| 6 | உடுவில் | பிள்ளையார் ந. நி | 10 | W | W | Y | W | 20 | உள்ளூர் | | |
| 7 | | பெரிய மதவடி ந.நி | 22 | Y | W | Y | W | 32 | வெளிநாடு | | |
| 8 | | பிள்ளையார் ந. நி /இக்கிரானை-01 | 43 | W | W | Y | W | 42 | உள்ளூர் | | |
| 9 | | இக்கிரானை-02 ந.நி | 10 | N | N | Y | N | 4.5 | உள்ளூர் | | |
| 10 | | கண்ணகி ந.நி | 153 | Y | Y | N | N | 110 | வெளிநாடு | | |
| 11 | | சபாபதிப்பிள்ளை ந.நி | 114 | W | W | Y | W | 90 | வெளிநாடு | | |
| 12 | சண்டிலிப்பாய் | இனுவில் மில் ந.நி | 5 | N | N | N | VW | | | | கோவில் |
| 13 | | சிந்து ந.நி | 16 | Y | N | S | Y | | உள்ளூர் | | |
| 14 | | இலந்தையடி ந.நி | 16 | N | Y | W | W | 18 | வெளிநாடு | | |
| 15 | | நீதவான் ந.நி | 14 | VW | Y | W | W | 5 | வெளிநாடு | | |
| 16 | | ஆலடி ந.நி | 22 | W | Y | W | W | | தெரியாது | | |
| 17 | | மடகச்சி ந.நி | 2 | W | N | W | W | 1 | வெளிநாடு | | |
| 18 | | கட்டுடை 01 | | | | | | | | | |
| 19 | | கட்டுடை 02 | 10 | N | Y | W | W | 46 | வெளிநாடு | | |
| 20 | | கட்டுடை 03 | 10 | N | N | N | W | 36 | வெளிநாடு | | |
| 21 | | கொம்பனிப்புலம் | 5 | W | Y | W | W | 6 | உள்ளூர் | | |
| 22 | | சண்டிலிப்பாய் GTMS | 3 | Y | Y | Y | Y | 5.5 | உள்ளூர் | | |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23 | கோப்பாய் | கிருஸ்ணர் கோவிலடி ந.நி | 65 | Y | Y | Y | N | 150 | வெளிநாடு & உள்ளூர் | | |
| 24 | | இந்துகல்லூரி ந.நி | 35 | N | W | S | S | | தெரியாது | | |
| 25 | | யோகபுரம் ந.நி | 58 | Y | S | S | W | 100 | தெரியாது | | |
| 26 | | இமுப்பையடி (A) ந.நி | 20 | VW | N | W | S | 15 | வெளிநாடு | | |
| 27 | | இமுப்பையடி (B) ந.நி | 26 | S | S | Y | S | | வெளிநாடு | | |
| 28 | | செல்வபுரம் ந.நி | 32 | Y | Y | Y | N | 16 | வெளிநாடு | | |
| 29 | கரவெட்டி | உடுப்பிட்டி தெற்கு ந.நி | 19 | W | Y | VW | S | 10 | உள்ளூர் | | |
| 30 | | சின்னக்காலனி ந.நி | 5 | | | | | | உள்ளூர் | | |
| 31 | பருத்தித்துறை | K.K.S ந.நி | 10 | N | N | Y | S | 14.5 | வெளிநாடு | | |
| 32 | | சின்னாவலை ந.நி | 43 | N | N | N | VW | 9 | உள்ளூர் | | |
| 33 | | சுப்பர் மடம் ந.நி | 47 | Y | W | Y | W | 50 | உள்ளூர் | | |
| 34 | | ஆனைக்குட்டி ந.நி | 41 | N | S | W | W | | உள்ளூர் | | |
| 35 | | நிலவன் ந.நி | 45 | W | W | Y | S | 14 | வெளிநாடு | | |
| 36 | | பாலாவி ந.நி | 53 | N | N | N | VW | 58 | உள்ளூர் | | |
| 37 | | சக்கோட்டை ந.நி | 10 | VW | N | N | N | 5 | உள்ளூர் | | |
| 38 | | திக்கம் | 64 | W | Y | W | Y | | உள்ளூர் | | |
| 39 | பருத்தித்துறை | ஓடக்கரை | 7 | | | | | | | | |
| 40 | | பருத்தித்துறை (கோட்டடி) | 25 | W | N | W | VW | 32 | உள்ளூர் | | |
| 41 | | பருத்தித்துறை முனை | 100 | W | Y | N | W | 15 | உள்ளூர் | | |
| 42 | | இன்பாசிட்டி | 35 | N | Y | N | S | | உள்ளூர் | | |
| 43 | நல்லூர் | காரைக்கால் ந.நி | 17 | W | N | S | N | 3 | | | கோவில் |
| | | மொத்தம் | **1536** | | | | | | | | |

**Y- ஆம் (வசதிகள் உண்டு) S- ஓரளவு W-குறைவு VW - மிகக் குறைவு N- இல்லை**

குடிநீர் வசதிகள்:-

அட்டவணை இல 02 இன் தகவலின் அடிப்படையில், 70%மான முகாம் மக்களுக்கு அன்றாட பாவனைக்கான குடிநீர் வசதி போதிய அளவு கிடைப்பதில்லை அல்லது

முற்றாகவே இல்லை. பாலாவி முகாம் குடும்பங்கள் தனியார் வியாபாரி ஒருவரிடம் இருந்து 1 லீற்றர் ஒரு ரூபாய் வீதம் குடிநீர் வாங்குகின்றனர். இதுபோன்று கட்டுடை-03 முகாம் மக்கள் கோவிலில் இருந்து தண்ணீர் கொண்டுவரும் தனியார் வியாபாரியிடம் இருந்து குடிநீர் வாங்குகின்றனர். கட்டுடையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா ஒரு கலன் நீர் வாங்க அனுமதிக்கப்பட்டுள்ளதாயினும் இதற்கு மாதாந்தம் 50 ரூபாய் நீர் வழங்களுக்கு செலுத்தவேண்டும். பிரதேச சபையும் அவ்வப்போது நீர் வழங்கி வருகின்றது. அநேகமான சந்தர்ப்பங்களில் முகாம் மக்கள் முகாமிற்கு வெளியில் உள்ள கிராமங்களில் இருந்தே தண்ணீரைப் பெற்றுக் கொள்கின்றனர். 14 முகாம்களில் வாழும் குடும்பங்களில் எத்தனை குடும்பங்களின் குடிநீர் பூர்த்தியாகியுள்ளது என்பதனை நாம் கணக்கெடுத்த போது அது 30% -40% மட்டுமே காணப்பட்டது. 4 முகாம்களில் 50% -70% தமது நீர் தேவையினை கிணறு மற்றும் குழாய் கிணறுகள் மூலம் பெறுகின்றனர். 8 முகாம்களில் மட்டுமே தண்ணீர் வசதி பூர்த்தி 70% செய்யப்பட்டுள்ளது.

## மின்சாரம் :-

55% முகாம்களில் போதுமான அல்லது மின்சார வசதிகள் இல்லை.1990ம் ஆண்டுகளில் இருந்து காணப்படும் முகாம்களை கருத்திற்கொள்ளும் போது முகாம்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை மிக தெளிவாக புலனாகிறது. மின்சார வசதி குறைவினால் பால் நிலை வன்முறை மற்றும் குற்றங்கள் அதிகரிப்பதுடன் மின்சாரத்தை சார்ந்து குடும்ப வருமானத்தைப் பெறும் குடும்ப நிறுவனங்களில் சாத்தியத்தன்மை குறைவடைகின்றது. இதற்கு மேலாக பிள்ளைகளின் கல்வி கற்றல் பாதிப்படைவதனால் பிள்ளைகளின் கல்வித் தரம் குன்றுகின்றது.

## சுகாதாரம்:-

முகாம் மக்களின் சுகாதார நிலைமைகளை அளவிடுவதற்கு அருகிலுள்ள சுகாதார நிலையம் மற்றும் வைத்திய சாலையை வினாவ வேண்டிய அவசியம் காணப்படவில்லை காரணம் முகாம் மக்களின் வாழ்க்கைச் சூழலின் நிலைமை இவர்கள் எவ்வாறான நோய்களுக்கு உட்படுவர் என்பதனை தெளிவாக காட்டுகிறது. பாதுகாப்பான குடிநீர் மற்றும் மின்சாரம் என்பவற்றினைப் பெறுதல் என்பன ஓர் சிறப்பான குறிகாட்டியாகும். சொந்த வீடு மற்றும் நில உரிமை இழப்பு மற்றும் சுய கௌரவமின்மை என்பன உளவியல் ரீதியில் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. பெண் தலைமைத்துவ குடும்ப உறுப்பினர்கள் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் குறைந்த உறக்கம் மற்றும் அதிக களைப்பு காரணமாக இரத்த சோகை மற்றும் இன விருத்தி தொடர்பான சுகாதார விடயங்கள் கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

போதுமான சுத்தமான மலசலகூட வசதியின்மை, சுற்று சூழல் சுகாதாரம் என்பன முகாம் மக்களில் சுகாதார நிலையில் தாக்கத்தினை செலுத்துகின்றன. சில முகாம்களில் அனைவருக்கும் பொதுவாக இரண்டு மலசலகூடங்களே காணப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் மழை காலங்களில் இவ் மலசலகூடங்களினை பயன்படுத்த முடியாதுள்ளது. பருத்தித்துறை பீச் றோட் முகாம் மக்கள் தமது காலை கடமையை கடற்கரை ஓரங்களில் மேற்கொள்ளுகின்றனர். பாலாவி முகாமில் உள்ள பெண் ஒருவர், “தனியாக மலசலகூட வசதியின்மை பாதுகாப்பற்ற தன்மையினை ஏற்படுத்தியுள்ளது” என்றார். இரவு நேரங்களில் மலசலகூடத்தை பயன்படுத்த பெண்கள் செல்ல முடியாது. இந் நிலை பெண்கள் மற்றும் சிறு பிள்ளைகளுக்கு பாதுகாப்பற்றது. இதனால் இவர்களது உளவியல் பாதிப்படைகின்றது. பயம் மற்றும் மின்சாரமின்மை காரணமாக சிறுநீர் கழிப்பதை கட்டுப்படுத்திக் கொள்ளல் சிறுநீர் பாதை தொற்றுநோய் ஏற்பட வாய்ப்பு அதிகம்.


முகாமின் கழிப்பறை வசதி


தற்காலிக குடிசை


குடிநீர் வசதி

எமது ஆய்வுக் குழு முகாம் மக்களின் சுகாதார நிலையை விளக்குவதற்கான ஓர் முயற்சியாக ஓர் தலைப்பினை முன்வைத்து அதனூடாக சுகாதார நிலையை காட்டுவதில் மற்றும் விழிப்புணர்வு செய்தலை மேற்கொண்டது. இதன் தலைப்புக் குறிகாட்டிகளாவன, முகாமில் போதுமான இடவசதி (குறைந்த நெரிசல் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு), போதுமான அளவு இயங்குகின்ற சுகாதார மலசலகூட வசதி, பல்வேறு தேவைக்கான போதுமான தண்ணீர், சுத்தமான சுற்றுப்புற சூழல் என்பனவாகும். இவ் நான்கு குறிகாட்டிகளில் ஒன்றினை மட்டும் கொண்ட முகாம்கள் மிக குறைந்த சுகாதார நிலைமை கொண்டவையாகும். மாறாக இதன் எதிர் நிலை நான்கு குறிகாட்டிகளையும் கொண்டவையாகும்.

இக் குறிகாட்டியில் நான்கினை சூழ்நிலை குறிகாட்டி கொண்ட 3 முகாம்களில் 70% -90% ஆகும். எனினும் இவை பதிவு செய்யப்பட்ட முகாம்கள் அல்ல. நான்கு குறிகாட்டிகளில் மூன்றினை உடைய வேண்டிய குறிகாட்டி 8 முகாம்கள் திருப்திகரமான நிலையில் 50%-70% முகாம்கள் உள்ளன. சில முகாம்களில் போதுமான மலசலகூடம் அல்லது தண்ணீர் வசதி காணப்படவில்லை. 19 முகாம்கள் 30-50% வகைப்படுத்தலிற்குள் (நான்கில் இரண்டு) காணப்படும் அல்லது போதுமான வசதி உண்டு. நான்கு முகாம்கள் 10-30% வகைப்படுத்தலிற்கு உட்பட்டன (நான்கில் ஒன்று) எவ்வாறாயினும், ஆறு முகாம்கள் திருப்தியாக குறிகாட்டியினைக் கூடக் கொண்டிருக்கவில்லை.

அதாவது இந்த முகாம்களில் இரண்டு மலசலகூடம் மட்டுமே உள்ளது. மற்றும் அவற்றுள் ஒன்று முகாம் மக்களால் பயன்படுத்த முடியா நிலையில் உள்ளது. அத்துடன் இவர்களுக்கு குடிநீர் வசதி கிடையாது.

ஊட்டச்சத்து பாதுகாப்பினை நோக்குமிடத்து, போசாக்கு தேவையினை பூர்த்தி செய்வதற்கான முறையான அணுகுமுறை ஒன்று இல்லை. முகாமில் உள்ள ஒரே ஒரு குடும்பம் ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார் மற்றும் சிறுவர்களுக்கான புரத பதிலீடான “திரிபோசாவை” பெறுகின்றனர்.

இதைவிட நாட்டின் ஏனைய பகுதிகளில் வழங்கப்படும் எந்தவொரு சுகாதார திட்டங்களும் இடம்பெயர்ந்த மக்களுக்கு கிடைப்பதில்லை.

## பாதுகாப்பு

**"2015ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதிக்கு முன்வரை, முகாம்களில் பாதுகாப்பு படையினர் காணப்பட்ட போதிலும் பாதுகாப்பு காணப்படவில்லை"**

முகாம் மக்களினால் ஒரு கூட்டத்தையோ ஒன்று கூடலயோ மேற்கொள்ள இயலாது இருந்தனர். இதே நேரம், வெளியாட்கள் அல்லது உறவினர்கள் பாதுகாப்பு படையினரின் விசாரனை மற்றும் தொந்தரவு காரணமாக விஜயம் செய்வதில்லை. இவை அனைத்து மக்களை பிரித்து மற்றும் நீதிக்காக இணைத்து போராடும் முயற்சியை இல்லாமல் செய்தனர். முகாம் வாழ் மக்களிடையில் சிலரை தகவலளிப்பவராக அடையாளப்படுத்தி மற்றும் அம்மக்களை பேசவிடாது பிரித்து ஆளும் எண்ணத்தின் ஊடாக மிக விரிந்த மட்டத்தில் அழுத்தங்களை மேற்கொண்டனர்.

எவ்வாறாயினும், அநேக மக்கள் நேர்காணல்களின் போது, ஆட்சி மாற்றத்தின் பின்னரான உணர்வுகளினை எம்மிடம் பகிர்ந்து கொண்டனர். முகாம்களில் பாதுகாப்பு பிரிவினரின் பிரசன்னம் குறைவடைந்தது. தற்பொழுது சுதந்திரத்தை உணர்வதுடன் தமது மற்றும் தம்பிள்ளைகளின் எதிர்காலம் குறித்த எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. புதிய அரசாங்கம் முகாம் மக்களுக்கான நீதியை பெற்றுத்தரும் என நினைக்கின்றனர். முகாம் மக்கள் தற்பொழுது மிக குறைந்த அளவிலேயே விசாரணைக்கு உட்படுத்தப்படுவதுடன் தொந்தரவுகள் இடம் பெறுவதில்லை. அண்மையில் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினால் நடத்தப்பட்ட கருத்தரங்கு ஒன்றில் முகாம் மக்கள் கலந்து கொண்டனர். உடுவில் கண்ணகி முகாம் தலைவரை குற்ற விசாரனை திணைக்கள (CID) நபர்கள் விசாரணை செய்த போதிலும் தொந்தரவு செய்யவில்லை. அதே நேரத்தில் இடம் பெயர்ந்த மக்கள் நீதவான் முகாம்களில் NAFSO ஆய்வினை நடத்தும் வேலையில் இரண்டு NIB நபர்கள் ஆய்வாளர்களை அணுகினர். தாம் அண்மித்த இராணுவ முகாமைச் சேர்ந்தவர்கள் எனவும் என்ன நடக்கின்றது என பார்ப்பதற்காக வந்ததாக கூறினர். 2015ம் ஆண்டு ஜனவரி 8ம் திகதிக்கு முன்னர் போன்று நாம் அனுபவித்த எந்தவொரு தொந்தரவும் இடம்பெறவில்லை. எனவே, முகாம் மக்களின் பாதுகாப்பு என்பது தற்பொழுது இராணுவம் தொடர்பானது அல்ல மாறாக கையில் உள்ள வசதிகள் மற்றும் வளங்களைச் சார்ந்தது. பாதுகாப்பற்ற சூழலை எதிர்கொண்ட காரணத்தினால் தமது உணர்வுகளை வெளிப்படையாக பகிர்ந்துகொள்ள தயங்குகின்றனர். எவ்வாறாயினும், நாம் எப்படி உணர்கின்றோம் என்பதனை பொலீஸில் முறைப்பாடு செய்ய தயங்குகின்றனர். ஏனெனில் இதனால் தங்களுக்கு நீதி கிடைப்பதில்லை மற்றும் மேலும் தொந்தரவுகளுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் என்பதனாலாகும். சில பெண்கள் எம்மிடம் பகிர்ந்து கொண்ட கருத்துப்படி பல சந்தர்ப்பங்களில் பொலீசாரால் முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. எனவே நீதி கேட்டு பொலீஸ் நிலையம் செல்வதற்கு பெண்கள் தயங்குகின்றனர்.

அநேகமாக முகாம்களில் இடம்பெயர்ந்த முகாம் மக்களின் பாதுகாப்பு அல்லது நலன் புரி திட்டங்கள் குறித்து அடையாளப்படுத்துவதற்கான முகாம் தலைவர் ஒருவர் இல்லை.

## நில உரித்துடைமை

அட்டவணை இல 02 இன் படி அவதானிக்கும் போது, 1056.05 பரப்பு (66 ஏக்கர்) காணியில் 1536 குடும்பங்கள் வசிக்கின்றன. இதனை சுற்றிலும் இடம் பெயர்ந்தவர்களின் முகாம்கள் உள்ளன. இடம் பெயர்ந்த மக்களின் முகாம்களில் இரண்டினைத் தவிர (இணுவில் மில், மற்றும் காரைக்கால்) ஏனைய அனைத்தும் தனியாருக்கு சொந்தமான காணிகளிலேயே அமைந்துள்ளது.

12 IDP முகாம்களின் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் வசிப்பதுடன், 21 முகாம்களின் காணி உரிமையாளர்கள் இலங்கையில் வசிக்கின்றனர். 2 IDP முகாம்களின் நில உரிமையாளர்கள் கோவில் நிலத்தில் அமைந்துள்ளது. 4 IDP முகாம்களின் நில உரிமையாளர்கள், இன்று வரை விஜயம் செய்யாததனால் அடையாளம் காணப்படாமல் உள்ளன.

எனினும் முகாமின் நில உரிமையாளர்கள் பெருந்தன்மையை நாம், எப்பொழுதும் IDP முகாமாக பயன்படுத்த வழங்கியுள்ளனர் என கருதலாகாது. பாதிக்கப்பட்ட மக்களை முடியுமானவரை மிக விரைவில் மீள் குடியமர்த்தி அவர்களின் வாழ்க்கையை வழமைக்கு திருப்புவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

"எமது சொந்த காணியில் நாம் சுதந்திரமாக வாழலாம்" (கிருஷ்ணர் கோவில் முகாம் பெண்மணி)

## அட்டவணை - 03:-

| இல | முகாமின் பெயர் | அரசாங்க மானிய திட்டங்கள் | | | நில உரிமையாளர்கள் நிலத்தினை மீள கோரியமை | | நிவாரணம் கடைசியாக வழங்கப்பட்ட வருடம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | சமுர்த்தி | நிவாரண உதவி | முதியோர் நிவாரணம் | ஆம் | இல்லை | அரச சார்பற்ற நிறுவனம் | அரசாங்கம் |
| 1 | தும்பு தொழிற்சாலை ந.நி | இல்லை | இல்லை | இல்லை | X | | 2006 | 2000 |
| 2 | நீதவான் இல்லம் | இல்லை | இல்லை | இல்லை | X | | | 2009 |
| 3 | ஊரணி ந.நி | இல்லை | இல்லை | இல்லை | | X | 2009 | 2009 |
| 4 | கோணட்புலம் | இல்லை | இல்லை | இல்லை | X | | 2009 | 2009 |
| 5 | அளவெட்டி கிழக்கு ந.நி | இல்லை | இல்லை | இல்லை | X | | | 2005 |
| 6 | பிள்ளையார் ந. நி | இல்லை | இல்லை | இல்லை | X | | | 2009 |
| 7 | பெரிய மதவடி ந.நி | இல்லை | இல்லை | இல்லை | X | | 2010 | 2010 |
| 8 | பிள்ளையார் ந. நி ஃஇக்கிரானை-01 | இல்லை | இல்லை | இல்லை | X | | 2007 | 2006 |
| 9 | இக்கிரானை-02 ந.நி | இல்லை | இல்லை | இல்லை | X | | 2010 | 2010 |
| 10 | கண்ணகி ந.நி | இல்லை | இல்லை | ஆம் | X | | 2009 | 2010 |
| 11 | சபாபதிப்பிள்ளை ந.நி | இல்லை | இல்லை | இல்லை | X | | 2010 | 2010 |
| 12 | இனுவில் மில் ந.நி | இல்லை | இல்லை | இல்லை | X | | 2010 | 2010 |
| 13 | சிந்து ந.நி | இல்லை | இல்லை | ஆம் | | X | 2010 | 2010 |
| 14 | இலந்தையடி ந.நி | இல்லை | இல்லை | ஆம் | X | | 2007 | 2010 |
| 15 | நீதவான் ந.நி | இல்லை | இல்லை | இல்லை | X | | 2011 | 2011 |
| 16 | ஆலடி ந.நி | இல்லை | இல்லை | ஆம் | | X | 2010 | 2010 |
| 17 | மடகச்சி ந.நி | இல்லை | இல்லை | இல்லை | X | | | 2006 |
| 18 | கட்டுடை 01 | | | | | | | |
| 19 | கட்டுடை 02 | இல்லை | இல்லை | ஆம் | X | | 2009 | 2009 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 20 | கட்டுடை 03 | ஒருவர் மட்டும் | இல்லை | ஆம் | | X | 2006 | 2006 |
| 21 | கொம்பனிப்புலம் | இல்லை | இல்லை | இல்லை | | X | 2010 | 2010 |
| 22 | சண்டிலிப்பாய் GTMS | இல்லை | இல்லை | இல்லை | | X | 2010 | 2010 |
| 23 | கிருஸ்ணர் கோவிலடி ந.நி | இல்லை | இல்லை | ஆம் | X | | 2004 | 2006 |
| 24 | இந்துகல்லூரி ந.நி | இல்லை | இல்லை | ஆம் | | X | 2004 | 2006 |
| 25 | யோகபுரம் ந.நி | இல்லை | இல்லை | ஆம் | | X | 2004 | 2006 |
| 26 | இழுப்பையடி (யு) ந.நி | இல்லை | இல்லை | ஆம் | X | | 2004 | 2006 |
| 27 | இழுப்பையடி (ഥ) ந.நி | இல்லை | இல்லை | ஆம் | X | | 2004 | 2006 |
| 28 | செல்வபுரம் ந.நி | இல்லை | இல்லை | ஆம் | | X | 2004 | 2006 |
| 29 | உடுப்பிட்டி தெற்கு ந.நி | | | | | | | |
| 30 | சின்னக்காலனி ந.நி | | | | | | | |
| 31 | மு.மு.ஞ ந.நி | இல்லை | இல்லை | இல்லை | X | | 2010 | 2010 |
| 32 | சின்னாவலை ந.நி | இல்லை | இல்லை | ஆம் | X | | 2010 | 2010 |
| 33 | சுப்பர் மடம் ந.நி | இல்லை | இல்லை | ஆம் | X | | 2008 | 2010 |
| 34 | ஆனைக்குட்டி ந.நி | இல்லை | இல்லை | ஆம் | X | | 2004 | 2006 |
| 35 | நிலவன் ந.நி | இல்லை | இல்லை | ஆம் | X | | 2004 | 2006 |
| 36 | பாலாவி ந.நி | இல்லை | இல்லை | ஆம் | X | | 2010 | 2010 |
| 37 | சக்கோட்டை ந.நி | இல்லை | இல்லை | இல்லை | X | | 2006 | 2006 |
| 38 | திக்கம் | இல்லை | இல்லை | ஆம் | X | | 2006 | 2006 |
| 39 | ஒடக்கரை | | | | | | | |
| 40 | பருத்தித்துறை (கோட்டடி) | இல்லை | இல்லை | இல்லை | X | | 2006 | 2006 |
| 41 | பருத்தித்துறை முனை | இல்லை | இல்லை | இல்லை | X | | 2009 | 2000 |
| 42 | இன்பாசிட்டி | இல்லை | இல்லை | இல்லை | X | | 2008 | 2009 |
| 43 | காரைக்கால் ந.நி | இல்லை | இல்லை | இல்லை | | X | | 2006 |

## முகாமிற்கான நிவாரணங்கள்

யாழ் மாவட்டத்தில் 48 முகாம்களில் வசிக்கும் 1536 குடும்பங்களில்,கட்டுடை-03 முகாமில் வசிக்கும் பெண் ஒருவர் மாத்திரமே சமுர்த்தி நலன்புரி திட்டத்தினால் நன்மையடைகின்றார். இதனை தவிர வேறு ஒருவர் கூட நலன்புரி நிவாரணங்கள் பெறவில்லை. எவ்வாறாயினும், 19 முகாம்களில் முதியவர்கள் முதியவர் நிவாரண உதவி பெறுவதாக தகவல் உண்டு. மிக சரியான எண்ணிக்கை கிடைக்கவில்லை. தெரிவு செய்யப்பட்ட புதிய அரசாங்கம் முதியோர் நிவாரண கொடுப்பனவினை 200.00 ரூபாவில் இருந்து 2000.00 ரூபாவாக அதிகரிப்பதாக வாக்குறுதியளித்திருந்தது. மொத்த முகாம்களிலும் அதிகரிக்கப்பட்ட இத்தொகை 3 முதியவர்களால் மட்டுமே பெறப்படுகின்றது.

1990ம் ஆண்டு அல்லது 2005ம் ஆண்டு காலப்பகுதியில் அமைக்கப்பட்ட முகாம்களுக்கான மானியம் அல்லது நலன்புரி உதவிகள் எதையும் 2010ம் ஆண்டிற்கு பின்னர் அரச சார்பற்ற நிறுவனங்களோ அரசாங்கமோ வழங்கவில்லை நீதவான் முகாம் மட்டும் 2011ம் ஆண்டு வரை மானியங்களை பெற்றது. ஓர் முக்கிய விடயம் யாதெனில், 2010ம் ஆண்டு மீண்டும் தெரிவு செய்யப்பட் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, நாட்டில் இடம்பெயர்தோரின் முகாம்கள் இல்லை என நிரூபிக்க முயற்சி செய்தார். நிவாரண/மானிய கொடுப்பனவின் நிறுத்தம், முன்னால் பாதுகாப்பு செயலாளர் கோதாபாய ராஜபக்ச மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச அவர்களும் யோகபுறம் முகாம் மக்களை பிழையாக வழிநடத்தியது வரை தொடர்ந்தது.

"ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அதிகாரத்திற்கு வந்த பின்னர் நலன்புரி முகாம்கள் அனைத்தும் மூடப்பட்டன" (யோகபுரம் முகாம் - உரும்பிராய்)

நாங்கள் வர்த்தகவிலான் கிராமத்தில் சொந்த வீட்டில் வசித்து வந்தோம். விவசாயத்தை வாழ்வாதாரதமாகக் கொண்டு வாழ்ந்து வந்தோம். 2015ம் ஆண்டு வடக்கின் வசந்தம் திட்டத்தின் அடிப்படையாக கொண்டு பசில் ராஜபக்ச அவர்கள் நாவற்குளம் கிராமத்தில் கந்தசாமி கோவிலில் சந்திப்பு ஒன்றை மேற்கொண்டார். நாம் எமது சொந்த கிராமத்துக்கு திரும்பலாம் என கருத்து வெளியிட்டார். இத் தீர்மானம் குறித்து நாம் மிகவும் மகிழ்வடைந்தோம். 2010ம் ஆண்டு ஜனவரி மாதம் எமது கிராமத்திற்கு திரும்பினோம். எனினும், இராணுவப்படை எமது காணிகளுக்கு செல்ல அனுமதிக்கவில்லை. எனவே மீண்டும் முகாமிற்கு திரும்பினோம். அரசசார்பற்ற நிறுவனங்களினால் முகாம்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் நிறுத்தப்பட்டன மற்றும் அவைகளினால் நடாத்தப்பட்ட அனைத்து நலன்புரி திட்டங்களும் நிறுத்தப்பட்டன.

"நாம் மீண்டும் ஏமாற்றப்பட்டோம்". இதனை விட மிக பாரதூரமான விடயம் யாதெனில், அரசாங்கத்தின் அனைத்து மனிதாபிமான உதவிகளும் நிறுத்தப்பட்டன". நாட்டில்

முகாம்கள் இல்லை அத்துடன் இடம்பெயர்ந்த மக்களும் இல்லை என உலகிற்கு இலங்கை அரசாங்கம் கூற முற்பட்டது. நாம் முற்றிலும் கைவிடப்பட்ட நிலையை அடைந்தோம். இடம் பெயர்ந்த மக்கள் முகாமினை விட்டு சென்று வாழ்வாதாரம் பெறக்கூடிய பிரதேசத்தினை தேடும் முயற்சியில் ஈடுபட்டனர். இவ் அனுபவத்தின் ஊடாக நாம், இலங்கை அரசாங்க திட்டங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் எம்மை முற்றிலும் கைவிட்டதாக கற்றுக்கொண்டோம். முகாம் காணிகளின் உரிமை தனியாளர்களுக்கு உரித்தானதாகும். 2009ம் ஆண்டு யுத்த வெற்றியின் பின்னர், இடம் பெயர்ந்த மக்களிடம் இருந்து தமது நிலத்தினை மீளப்பெற முயற்சித்தனர். எமது ஆய்வில் திரட்டபட்ட தகவல்களின் அடிப்படையில், 41 முகாம்களில் 10 முகாம்களைத் தவிர ஏனையவற்றின் நிலத்தினை நில உரிமையாளர்கள் மீளப்பெற எதிர்பார்க்கின்றனர். இக் கதையின் மிக சோகமான விடயம் யாதெனில், இடம் பெயர்ந்த மக்களை இலங்கை அரசாங்கம் முற்று முழுதாக கைவிட்டு விட்டது

மக்கள் தமக்குள்ள குறைகளை இவ்வாறு கூறினர், “நாம் எமது தாய் மண்ணிலேயே அகதிகளாகினோம்”

“ எமது நிலங்களுக்கு என்ன நடந்தது என எமக்கு தெரியாது” (எஸ்.செல்லம்மா, வயது-75, கிருஷ்ணர் கோவிலடி முகாம்)

## அட்டவணை இல-04 இடம்பெயர்ந்த முகாம்களில் உள்ள பெண்கள் மற்றும் சிறுவர்கள்

| இல | முகாமின் பெயர் | பதிவு செய்யப்பட்ட குடும்பங்கள் | பெண் தலைமைத்துவ குடும்பங்களின் எண்ணிக்கை | காணாமல் போன உறுப்பினர்களை கொண்ட குடும்பங்களில் பெண்களின் எண்ணிக்கை | பிள்ளைகளின் எண்ணிக்கை | பாடசாலை செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை | 20 வயதை கடந்த பெண் பிள்ளைகளின் எண்ணிக்கை | ஏனையவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | தும்பு தொழிற்சாலை ந.நி | 17 | 6 | | 30 | 30 | 25 | |
| 2 | நீதவான் இல்லம் | 60 | 15 | | 14 | 14 | 8 | |
| 3 | ஊரணி ந.நி | 32 | 6 | | 33 | 33 | 6 | |
| 4 | கோணட்புலம் | 201 | 56 | | 180 | 165 | 15 | |
| 5 | அளவெட்டி கிழக்கு ந.நி | 23 | 9 | | 16 | 16 | 20 | |
| 6 | பிள்ளையார் ந. நி | 10 | 2 | | 38 | 38 | | |
| 7 | பெரிய மதவடி ந.நி | 21 | 5 | | 25 | 25 | 3 | |
| 8 | பிள்ளையார் ந. நி /இக்கிரானை-01 | 32 | 8 | | 12 | 12 | 8 | |
| 9 | இக்கிரானை-02 ந.நி | 9 | 3 | | 3 | 3 | | |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | கண்ணகி ந.நி | 101 | 33 | | 185 | 179 | 40 | | |
| 11 | சபாபதிப்பிள்ளை ந.நி | 121 | 32 | | 124 | 80 | 40 | | |
| 12 | இனுவில் மில் ந.நி | 1 | 1 | | 9 | 9 | | | |
| 13 | சிந்து ந.நி | 10 | 3 | | 8 | 8 | | | |
| 14 | இலந்தையடி ந.நி | 14 | | | 20 | 20 | 5 | | |
| 15 | நீதவான் ந.நி | 21 | 2 | | 65 | 65 | 5 | | |
| 16 | ஆலடி ந.நி | 11 | 3 | | 20 | 20 | | | |
| 17 | மடகச்சி ந.நி | 2 | | | 5 | 5 | 2 | | |
| 18 | கட்டுடை 01 | 4 | | | | | | | |
| 19 | கட்டுடை 02 | 12 | 4 | | 2 | 2 | 5 | | |
| 20 | கட்டுடை 03 | 2 | 5 | | 12 | 12 | 1 | | |
| 21 | கொம்பனிப்புலம் | 5 | 1 | | 4 | 4 | | | |
| 22 | சண்டிலிப்பாய் GTMS | 11 | 1 | | 6 | 6 | 4 | | |
| 23 | கிருஸ்ணர் கோவிலடி ந.நி | 78 | 6 | | 80 | 80 | | | |
| 24 | இந்துகல்லூரி ந.நி | 33 | 7 | 2 | 42 | 30 | 20 | | |
| 25 | யோகபுரம் ந.நி | 61 | 9 | | 95 | 85 | | | |
| 26 | இழுப்பையடி (யு) ந.நி | 55 | 1 | | 16 | 15 | 6 | | |
| 27 | இழுப்பையடி (ட) ந.நி | | 7 | | 62 | 37 | | | |
| 28 | செல்வபுரம் ந.நி | 30 | 8 | | 40 | 35 | 20 | | |
| 29 | உடுப்பிட்டி தெற்கு ந.நி | 15 | 6 | | 10 | 2 | 4 | | |
| 30 | சின்னக்காலனி ந.நி | 5 | | | | | | | |
| 31 | மு.மு.ஞ ந.நி | 8 | 1 | | 7 | 7 | 1 | | |
| 32 | சின்னாவலை ந.நி | 46 | 7 | | 90 | 88 | 12 | | |
| 33 | சுப்பர் மடம் ந.நி | 75 | 13 | | 35 | 35 | 5 | | |
| 34 | ஆனைக்குட்டி ந.நி | 69 | 8 | | 45 | 41 | 43 | | |
| 35 | நிலவன் ந.நி | 42 | 7 | | 45 | 40 | 10 | | |
| 36 | பாலாவி ந.நி | 52 | 10 | | 67 | 65 | 5 | | |
| 37 | சக்கோட்டை ந.நி | 11 | 1 | | 6 | 6 | 2 | | |
| 38 | திக்கம் | | 16 | | 104 | 104 | | | |
| 39 | ஓடக்கரை | | | | 17 | 15 | 2 | | |
| 40 | பருத்தித்துறை (கொட்டடி) | | 5 | | 25 | 25 | 10 | | |
| 41 | பருத்தித்துறை முனை | | 30 | | | 250 | 30 | | |
| 42 | இன்பர்சிட்டி | | 9 | | 27 | 27 | 4 | | |
| 43 | காரைக்கால் ந.நி | 12 | 5 | | 9 | 9 | 20 | | |
| | **மொத்தம்** | **1312** | **351** | 2 | **1883** | **1742** | **381** | 0 | |

நாம் அடையாளம் கண்டுகொண்டதன் அடிப்படையில், அனைத்து இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் மிகவும் பாதிப்படையக்கூடிய, மிகவும் ஓரம்கட்டப்பட்ட குழுவாக பெண்கள் மற்றும் சிறுவர்களும் காணப்படுகின்றனர். ஆய்வில் ஓர் பெண் கூறியதன் படி, பெண் தலைமைத்துவ குடும்ப உறுப்பினர்களும் சிறுவர்களுமே மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்ட குழுவாகும். ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட 41 முகாம்களில் 351 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் (WHF) உள்ளன. என்றாலும், பல்வேறு அறிக்கைகள் மற்றும் ஊடக வெளிபாடுகளின் அடிப்படையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் 84,000 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளன. எனினும் இலங்கை அரசாங்கத்தினால் வழிநடத்தப்படும் LLRC அறிக்கையில் உள்ளது வேறுபட்ட எண்ணிக்கையாயினும் 59,000 WHF என கூறப்பட்டுள்ளது. இடம் பெயர்ந்த மக்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மேலதிக அவதானம் செலுத்தப்பட வேண்டியவர்கள்.

## முகாமில் வாழும் பிள்ளைகளின் கல்வி மற்றும் போஷாக்கு

அட்டவணை இல-04 இல் காட்டப்பட்டுள்ளதன் படி IDP முகாம்களில் 1833 சிறு பிள்ளைகள் உள்ளனர், இவர்களில் 1742 பிள்ளைகள் அல்லது 92 சதவீதமானவர்கள் பாடசாலைக்கு செல்கின்றனர். பொருளாதார கஷ்டங்களிற்கு மத்தியிலும் பெற்றோர்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றனர். இவ் உயர் சதவீதம் காட்டுவது யாதெனில் பிள்ளைகளின் கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளமையாகும். எவ்வாறாயினும், முகாமில் உள்ள சில குடும்பங்களின் கருத்துப்படி, சில பிள்ளைகள் பாடசாலை விட்டு இடைவிலகியிருப்பினும் இதனை வெளிப்படுத்த தயங்கி தம் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதாக பாசாங்கு செய்கின்றனர். எனவே பிள்ளைகளின் கல்வி தொடர்பில் குறிப்பாக கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியதுடன் அது குறித்து மிக ஆழமாக ஆராய்ந்து பகுப்பாய்வு செய்து பிள்ளைகள் சிறப்பாக செயற்பட தேவையான உதவிகளை வழங்க வேண்டும்.

இதே வேளை, சில இளைஞர்களின் கருத்துப்படி, இடம் பெயர்ந்த மக்களின் முகாம்களில் சமூக சீரழிவு செயற்பாடுகள் அதிகரித்து வருகின்றது, உதாரணமாக போதைக்கு அடிமையாதல், மற்றும் சிறுவர் துஸ்பிரயோகங்களை கூறலாம். இப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களினால் உடனடியாக ஓர் பொறிமுறை அவசியம் என கருத்துரைத்தனர். இல்லையெனில் எதிர்காலத்தில் ஓர் பாரிய சமூக சீரழிவு ஏற்படும்.

இடம் பெயர்ந்த முகாம்களில் வாழும் பெண் தலைமைத்துவகுடும்பங்களின் பெண் பிள்ளைகள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுப்பதுடன், குடும்பத்திற்கான

வருமானம் பெறும் மார்க்கங்களை தாமே கண்டடைகின்றனர். அனேகமான இளம் வயது பிள்ளைகள் ஆடை தொழிற்சாலைக்கு அல்லது பிழைப்பிற்காக வேறு ஏதாவது தொழிலுக்காக செல்கின்றனர். 12/13 வயதுடைய பிள்ளைகள் கூட, தனது தாயாரினால் கவனிக்கமுடியாமையினால் சில கூலி வேலை செய்கின்றனர். சில தாய்மார் பிள்ளைகளின் கல்வியின் முக்கியத்துவத்தினை அறிந்திருப்பதில்லை. அதே நேரத்தில் சில தாய்மார் அதிக முயற்சி செய்து பிள்ளைகளை கல்வி கற்பிக்கின்றனர். இந்த சூழ்நிலையுடன் தொடர்பான சில பிரச்சினைகள் குறித்து எமது ஆய்வுக் குழுவினால் கவனம் செலுத்தப்பட்டது. அவையாவன இரண்டு தசாப்தத்திற்கு மேலாக முகாம் வாழ்க்கையினை இம் மக்கள் தொடர்வதன் காரணமாக இவர்களின் சமூக அங்கீகாரம் குறைவாக உள்ளதுடன் குறைந்த சமூக பொருளாதார சூழ்நிலை காரணமாக ஓரம்கட்டப்பட்டுள்ளனர்.

## அட்டவனை – 05. மீள்குடியேற்ற அபிலாஷைகள்

| இல | முகாமின் பெயர் | சொந்த இடத்திற்கு திரும்பல் | காரணம் | சொந்த இடத்திற்கு திரும்ப எண்ணம் இல்லை | காரணம் | மீள்குடியேற்றத்தின் போது எதிர்பார்க்கும் அடிப்படை வசதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | அரச சார்பற்ற நிறுவனத்திடம் | அரசாங்கத்திடம் |
| 1 | தும்பு தொழிற்சாலை ந.நி | Y | சுதந்திரமாக வாழலாம் | | | | நிலம், வீடு, வாழ்வாதாரம் |
| 2 | நீதவான் இல்லம் | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு | | | | நிலம், தண்ணீர் |
| 3 | ஊரணி ந.நி | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு | | | | நிலம், வீடு |
| 4 | கோணட்புலம் | Y | வாழ்வாதாரமாக மீன்பிடி உள்ளது | | | போராட்ட-த்திற்கான ஆதரவு | நிலம் |
| 5 | அளவெட்டி கிழக்கு ந.நி | Y | முகாம் வாழ்கையின் சிரமங்கள் | | | | நிலம், வீடு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 6 | பிள்ளையார் ந. நி | Y | மீன்பிடி, விவசாயத்திற்கு வசதி உண்டு | | | போராட்ட-த்திற்கான ஆதரவு | நிலம், நிவாரண உதவி |
| 7 | பெரிய மதவடி ந.நி | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு | | | நிவாரண உதவி | நிலம், வீடு, தண்ணீர் |
| 8 | பிள்ளையார் ந. நி /இக்கிரானை-01 | Y | எமக்கு சொந்த நிலம் வளமானது | | | அடிப்படை வசதி | நிலம், வீடு, தண்ணீர் |
| 9 | இக்கிரானை-02 ந.நி | Y | பரம்பரை நிலம், தொழில் வாய்ப்பு அதிகம் | | | நிவாரண உதவி | நிலம், வீடு |
| 10 | கண்ணகி ந.நி | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு, சமூக பிரச்சினைகள் முகாமில் அதிகரிக்கின்றன | N | எமக்கு சொந்த நிலம் இல்லை, பிள்ளைகளின் கல்வி | நிவாரண உதவி, வாழ்வா-தாரம், பாட-சாலை, வீடு | நிலம், வீடு |
| 11 | சபாபதிப்ப-ிள்ளை ந.நி | Y | எமக்கு சொந்த நிலம், வாழ்வாதார நடவடிக்கை உண்டு | | | நிவாரண உதவி | நிலம், வீடு |
| 12 | இனுவில் மில் ந.நி | Y | சுதந்திரமாக வாழலாம் | | | நிவாரண உதவி தற்காலிக வீடு (டெண்ட்) | நிலம், வீடு |
| 13 | சிந்து ந.நி | Y | சுதந்திரமாக வாழலாம் | | | நிவாரண உதவி தற்காலிக வீடு (டெண்ட) | நிலம், வீடு |
| 14 | இலந்தையடி ந.நி | Y | தற்போது வாழும் இடத்தின் நிச்சயமற்ற தன்மை | N | கூட்டுக் குடும்பம் என்பதனால் எம-க்கு சொந்த நிலம் இல்லை | அடிப்படை வசதி | நிலம், வீடு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 15 | நீதவான் ந.நி | Y | எமது சொந்த இடத்தில் வாழ்வாதாரத்தி-ற்கான வளங்கள் உண்டு | | | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை |
| 16 | ஆலடி ந.நி | | | N | எமக்கு சொந்த நிலம் இல்லை | | நிலம், வீடு, அடிப்படை வசதி |
| 17 | மடகச்சி ந.நி | | | N | எமக்கு சொந்த நிலம் இல்லை | நிவாரண உதவி | நிலம், வீடு |
| 18 | கட்டுடை 01 | | | | | | |
| 19 | கட்டுடை 02 | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு | N | எமக்கு சொந்த நிலம் இல்லை | அடிப்படை வசதி | நிலம் |
| 20 | கட்டுடை 03 | | | N | எமக்கு நிலம் இல்லை | அடிப்படை வசதி | நிலம், வீடு |
| 21 | கொம்பனிப்புலம் | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு வாழ்வாதாரத்தி-ற்கான வளங்கள் உண்டு | | | | நிலம் |
| 22 | சண்டிலிப்பாய் GTMS | Y | வாழ்வாதாரத்தி-ற்கான வசதிகள் உண்டு | | | நிவாரண உதவி | நிலம், வீடு |
| 23 | கிருஸ்ணர் கோவிலடி ந.நி | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு, முகாமில் ஒன்றுமில்லை | | | | நிலம், வீடு |
| 24 | இந்துகல்லூரி ந.நி | Y | அகதி என்பதனால் கிராம மக்கள் எம்மை மதிப்பதில்லை, சொந்த இடத்தில் எமக்கு நிலம் இல்லாவிடினும் சுதந்திரமாக வாழலாம் | | | நிவாரண உதவி | வீடு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 25 | யோகபுரம் ந.நி | Y | தற்போது வாழும் இடத்தில் ஒன்றுமில்லை | | | | வீடு |
| 26 | இழுப்பையடி (யு) ந.நி | | | | | | |
| 27 | இழுப்பையடி (டீ) ந.நி | | | | | | |
| 28 | செல்வபுரம் ந.நி | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு, முகாமில் ஒன்றுமில்லை, குறிப்பு- நிலமற்றவர்கள் சொந்த இடத்தில் காணி பெற விரும்புகின்றனர், இல்லையெனில் மாற்று நிலத்தினை எதிர்பார்க்கின்றனர் | | | | நிலம், வீடு, அடிப்படை வசதி |
| 29 | உடுப்பிட்டி தெற்கு ந.நி | Y | எமக்கு போதுமான வாழ்வாதார வசதிகள் உண்டு | | | அடிப்படை வசதி | நிலம், வீடு |
| 30 | சின்னக்காலனி ந.நி | Y | | | | | |
| 31 | மு.மு.ளு ந.நி | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு வாழ்வாதாரத்தி-ற்கான வளங்கள் உண்டு | | | நிவாரண உதவி | நிலம், வீடு, அடிப்படை வசதி |
| 32 | சின்னாவலை ந.நி | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு வாழ்வாதாரத்தி-ற்கான வளங்கள் உண்டு | | | ஒன்றுமில்லை | ஒன்றுமில்லை |
| 33 | சுப்பர் மடம் ந.நி | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு வாழ்வாதாரத்தி-ற்கான வளங்கள் உண்டு | | | நிவாரண உதவி | அடிப்படை வசதி, நிலம் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 34 | ஆனைக்குட்டி ந.நி | Y | சொந்த இடத்திற்கு திரும்பிச் சென்றால் மீன்பிடியில் ஈடுபடலாம் | | | மீன்பிடி உப-கரணங்கள் | | நிலம், வீடு |
| 35 | நிலவன் ந.நி | Y | முகாம் நில உரிமையாளர்கள் எம்மை வெளியேற்ற முனைகின்றனர் | | | மீள்குடியேற்ற போராட்டத்திற்கான ஆதரவு | | அடிப்படை வசதிகளுடன் மீள்குடியேற்றம் |
| 36 | பாலாவி ந.நி | Y | எமது சொந்த நிலத்தில் குடிசையில் வாழ்ந்தாலும் யாரும் எம்மை வெளியேற்ற மாட்டார்கள் | | | நிவாரண உதவி, தற்காலிக தங்குமிடம்- மழை காலத்தில், நவம்பர், ஜனவரி வரை தற்காலிக தங்குமிடம் | | நிலம், வீடு, அடிப்படை வசதி |
| 37 | சக்கோட்டை ந.நி | Y | முகாமில் தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள் இல்லை | | | அடிப்படை வசதி | | நிலம், வீடு |
| 38 | திக்கம் | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு, சொந்த இடத்தில் கூடிய வருமானம் பெறலாம் | | | அடிப்படை வசதி | | நிலம், வீடு |
| 39 | ஓடக்கரை | | | | | | | |
| 40 | பருத்தித்துறை (கோட்டடி) | Y | உற்றார் உறவினர்களுடன் வாழ விரும்புகின்றோம் | | | தற்காலிக தங்குமிடம் | | அடிப்படை வசதிகளுடன் மீள்குடி-யேற்றம் |
| 41 | பருத்தித்துறை முனை | Y | கிராம மக்களால் அவமதிக்க-ப்படுகின்றோம் | | | மீள்குடியேற்ற போராட்ட-த்திற்கான ஆதரவு | | நிலம், வீடு |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 42 | இன்பாசிட்டி | Y | எமக்கு சொந்த நிலம் உண்டு வாழ்வாதாரத்திற்கான வளங்கள் உண்டு, எமது பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்ற நாம் எமது சொந்த இடத்திற்கு திரும்ப வேண்டும் | | | மீள்குடியேற்ற போராட்டத்திற்கான ஆதரவு | நிலம், வீடு |
| 43 | காரைக்கால் ந.நி | Y | அடிப்படை வசதிகளுடன் மனிதர்களாக வாழ விரும்புகின்றோம் | | | | அடிப்படை வசதிகளுடன் மீள்குடியோ-ற்றம் |

## மீள் குடியேற்ற செயன்முறையின் தற்போதைய நிலைமை

பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இடம் பெயர்ந்த முகாம்களில் வாழும் மக்கள் அனைவரும் உடனடியாக மீள்குடியேற்றப்படடல் வேண்டும். முன்னய அரசாங்கம் இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதறகு எவ்விதமான முயற்சியினையும் மேற்கொள்ளவில்லை. இவ் ஆய்வின் மூலமாக 9 குடும்பங்கள் மட்டுமே முழுமையாக மீள்குடியேற்றப்பட்டுள்ளது என அறியக்கிடைத்தது. அத்துடன் 200 குடும்பங்கள் மீள்குடியேற அனுமதி வழங்கப்படடுள்ளது. முகாமில் 100 குடும்பங்கள் காணப்பட்டாலும் 20 குடும்பங்களுக்கு மட்டுமே அனுமதி கிடைத்துள்ளது. இந்நிலை பின்வரும் இடம் பெயர்ந்த முகாம்களில் பிரதிபலிக்கின்றது, கிருஸ்ணர் கோவிலடி முகாம், இந்து கல்லூரி முகாம், யோகபுரம் முகாம், இழுப்பயடி முகாம் மற்றும் செல்வபுரம் முகாம் என்பனவாகும்.

“ எமது வாழ்க்கை தொடா்பின் எந்தவொரு தீா்மானமும் இல்லை. எம் தொடா்பில் உடனடியான தீா்மானம் ஒன்று எடுக்கப்படல் வேண்டும், நாம் எமது சொந்த நிலங்களில் மீள் குடியேற்றப்பட வேண்டும்.” (இழுப்பயடி முகாம் மக்கள்)



தெல்லிப்பலை எதிர்ப்பு போராட்டத்தில் எதிர்கட்சித்தலைவர் மற்றும் கட்சித்தலைவர்கள்



2014 ஜீலை 15 எதிர்ப்பு போராட்டம் தடை செய்யப்பட்ட பின் நடாத்திய கருத்தரங்கு.

முகாம்கள் அமைந்துள்ள இடத்தை தெரிந்துகொள்வதற்கு இவ் இணைய முகவரிக்கு செல்லவும்

https://www.google.com/maps/d/edit?mid=zsf3oMcSf17U.kaaPJMZoCVsI

எமது ஆய்வுக்குழு இடம்பெயர்ந்த முகாம் மக்களிடம் முகாம் சூழ்நிலை மற்றும் மீள்குடியேற்றம் குறித்த அவர்களது கருத்துக்களை கேட்டறிந்தோம். 35 முகாம்களை சேர்ந்த மக்கள் தமது சொந்த நிலங்களுக்கு திரும்பச் செல்ல வேண்டும் மற்றும் சொந்த கிராமத்திலேயே மீள்குடியேற்றப்படல் வேண்டும் என உறுதியாக கூறினர். "எமது நிலம் எமக்கு வேண்டும்" எமது கிராமத்தில் நாம் கௌரவத்துடன் வாழ்ந்தோம். இடம் பெயர்வின் காரணமாக எமது சுய கௌரவத்தை இழந்துள்ளோம். நாம் தற்பொழுது தினக்கூலி தொழிலாளி ஆகிவிட்டோம். எவ்வாறாயினும், எமது வாழ்வினை நாம் கட்டியெழுப்ப வேண்டியதுடன் எமது நிலம் எமக்கு தேவை".

இரண்டு முகாம்களில் வாழ்பவர்கள் மட்டும் அதே முகாமில் தொடர்ந்து வசிக்க எதிர்பார்க்கின்றனர். ஏனைய நான்கு முகாமில் வசிப்பவர்கள் தமது சொந்த நிலத்திற்கு திரும்ப அல்லது அதே முகாமில் வசிக்க அல்லது மாற்று நிலங்களை எதிர்பார்க்கின்றனர். இவ்வாறான தீர்மானத்திற்கு பிரதான காரணம், தமது சொந்த கிராமங்களில் இவர்களுக்கென சொந்த நிலம் காணப்படாமை மற்றும் முகாம் வாழ்க்கைக்கு பழக்கப்பட்டுவிட்டமை என்பனவாகும். காணியினை வேண்டி நிற்கும் அனேக குடும்பங்களுக்கு தமது சொந்த கிராமங்களில் சொந்த காணிகள் இல்லை, அத்துடன் கூட்டு குடும்பங்களின் எண்ணிக்கை அதிகம்.

தமது சொந்த கிராமத்தில் அனைத்து வசதிகளும் உள்ளதாக இடம்பெயர்ந்த மக்கள் கூறுகின்றனர். சொந்த நிலத்திற்கு திரும்புவதற்கான அனுமதி கிடைத்த மக்கள், தமது நிலங்களை துப்பரவு செய்வதில் கலந்துகொள்ளவில்லை, இதற்கு காரணம்

குறைந்த வருமானம், வாழ்வாதாரம் இழக்கப்படும் என்ற அச்சம், பட்டினிப்பயம் மற்றும் போதிய வசதிகளின்மை என்பனவாகும்.

இந் நிலைமை பெண் தலைமைத்துவ குடும்பங்களை அதிகம் பாதிக்கின்றது. குடும்பத்தில் ஆண்கள் இருக்கும் பொழுது, குடும்பப் பராமரிப்புடன் தொடர்புடைய வேலைகளை அவர்கள் செய்வார்கள். ஆனால் முகாம்களில் மற்றும் ஏனைய இடங்களில் பெண் தலைமைத்துவ குடும்பங்களின் நிலைமை அவ்வாறானதல்ல. எனவே, இலங்கை அரசாங்கம் இடம்பெயர்ந்த மக்களுக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும் மீள்குடியேற்றத்திற்குத் தேவையான அனைத்து அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும். ஆய்வு தகவலின் படி, கிட்டத்தட்ட அனைத்து மக்களும் தமது சொந்த இடங்களுக்கு திரும்புவதனை உறுதியாக எதிர்பார்க்கின்றனர். எனவே இலங்கை அரசாங்கம் சொந்த இடங்களுக்கு திரும்ப விரும்பும் மக்களுக்குத் தேவையான உதவிகளை வழங்க வேண்டும்.

முகாமில் வாழும் கூட்டுக்குடும்பங்களுக்கு நிலம் வழங்குவதற்கான பொறிமுறை ஒன்று தேவை. இவ் அனைத்து விடயங்களும் மக்களின் ஒப்புதலுடன் செயற்படுத்தல் வேண்டும். மீள்குடியேற்ற செயன்முறை சர்வதேச தர வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெற வேண்டும் என்பதனை நாம் மறந்துவிடக்கூடாது. இலங்கை அரசாங்கத்திடம் இடம்பெயர்ந்த மக்கள் கேட்டுக்கொள்வது தம்மை தமது சொந்த நிலங்களுக்கு செல்ல அனுமதித்து அங்கு மீள் குடியேற்றுவதே. இவர்களினது எதிர்பார்ப்பினை இலங்கை அரசாங்கம் செவிசாய்க்கும் என எதிர்பார்க்கின்றனர்.

## முடிவுரை/ ஆய்வின் முடிவுகள்

ஜனவரி மாதம் 8ம் திகதிக்கு பின்னர் முதல் ஆகஸ்ட் 17ம் திகதி 2015ம் ஆண்டு வரையான காலப்பகுதியில், சில காணிகளை விடுவிக்க மற்றும் தமது சொந்த இடத்தில் இடம் பெயர்ந்த மக்களை குடியேற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எம் போன்ற நில உரிமைக்காக போராடும் அமைப்புக்களுக்கு உத்வேகத்தைத் தந்துள்ளது. 2015ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதி அமைச்சரவையினால், இடம் பெயர்ந்த மக்களை தமது சொந்த நிலத்திற்கு அனுப்புவது சார்பாக எடுக்கப்பட்ட தீர்மானம் முக்கியமானதும் பாராட்டத்தக்கதுமாகும். அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைவாக விடுவிக்கப்பட்ட காணிகளில் பாணம, சம்பூர் மற்றும் வலலாய் என்பன உதாரணங்களாகும்.

தமது நிலங்களுக்கு செல்ல அனுமதிக்கப்பட்ட அனைத்து மக்களும் இடம்பெயர்ந்த மக்கள் அல்ல. தமது சொந்த நிலங்களுக்கு செல்ல அனுமதித்தது மிகப் பெரிய ஆறுதலாக கருதப்பட்டாலும், மீள்திரும்பல் செயன்முறையின் போது மீள் திரும்புபவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் கூட

வழங்கப்பட்டிருக்கவில்லை. மக்கள் மீள் திரும்ப அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளோ அல்லது தங்குமிட வசதிகளோ காணப்படவில்லை. ஆழ்ந்த கலாச்சார முக்கியத்துவத்தின் அழிவு காரணமாக நிலங்களின் விலையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

சமுதாயத்தில் ஒரு தனிநபர் பாதிக்கப்பட்டிருப்பினும், அவரை காப்பாற்றி கட்டியெளுப்புவது சமுதாயத்தின் பொறுப்பாகும். இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகம் தொடர்ந்தும் சிரமப்படுவதனை அனுமதிப்பதற்கு நியாயமான காரணம் எதுவும் கிடையாது. யுத்தம் முடிவடைந்து ஆறு வருடங்கள் கடந்துவிட்டன. எமது அடிப்படை கேள்வி யாதெனின், இடம் பெயர்ந்த மக்கள், பெண்கள் மற்றும் பிள்ளைகளின் ஒழுக்கமான வாழ்க்கைக்கான உரிமை என்பவற்றினை ஏன் எம் சமூகம் மதிக்கக் கூடாது? அத்துடன் அவர்களை தமது சொந்த நிலத்திற்கு அல்லது மாற்று இடத்திற்கு செல்ல ஏன் அனுமதிக்கக் கூடாது? எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் தமது சொந்த நிலத்தினையே கேட்கின்றனர். இது இடம் பெயர்ந்த மக்களின் இடம்பெயர்ந்த நாள் முதல் தொடரும் போராட்டமாகும். மற்றும் இவ் விடயத்தினை இலங்கை அரசின் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சியின் கீழ் நன்கு விவாதிக்கப்பட்ட LLRC பரிந்துரையில், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகத்தின் மீள்குடியேற்றத்தின் முக்கியத்துவம் தெளிவாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. LLRC அறிக்கையின் சரத்து இல 9.121 தொடக்கம் 9.152 வரையில் விஷேடமாக மீள்திரும்பல் மற்றும் மீள் குடியேற்ற நிலப்பிரச்சினை தொடர்பில் பரிந்துரைகள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

9.106 நபர்களின் நடமாடும் சுதந்திரத்தின் மூலம் சொந்த இடத்தில் மீள்குடியேறுவதனை மதிப்பதற்கான தேவை காணப்படுகின்றது. சர்வதேசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தன்னார்வத்துடன் மீள் திரும்புவதற்கான கொள்கை பின்பற்றப்படல் வேண்டும். இது குறித்து, மக்கள் மீள் குடியேறுவதற்கான பகுதி மற்றும் இது தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வு மற்றும் அவர்களுக்கான கிடைக்கப்பெறும் வாய்ப்புக்கள் குறித்து தெளிவான கொள்கையினை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். மீள்குடியேற்ற திட்டம் தொடர்பான மிகத் தெளிவான மற்றும் நன்கு ஆராய்ந்த கொள்கை மூலமாக மக்களின் மீள் குடியேற்ற வாய்ப்புக்கள் வழங்குதல் ஊடாக தவறான புரிந்துணர்வு மற்றும் சந்தேகம் என்பவற்றினை அடையாளப்படுத்த உதவியாக அமையும்.

LLRC உள்நாட்டில் உருவாக்கப்பட்ட பொறிமுறை மற்றும் பரிந்துரைகள், இடம்பெயர்ந்தோரின் குறைபாடுகளினை எவ்வாறு மிக தெளிவாக எடுத்துரைப்பது என கூறியுள்ளது. மேலும் உள்நாட்டு மாதிரிகள், சர்வதேச சமூகம், பிரதானமாக

ஐக்கிய அமெரிக்கா போன்ற இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை தொடர்பாக மிக உறுதியான ஒப்பந்தத்திற்கு வந்துள்ளன.

நிலம், மீன்பிடி மற்றும் காடுகள் ஆட்சியுரிமை தொடர்பான பொறுப்புடைய அரசாங்கத்தின் தன்னார்வ வழிகாட்டல் (VGGT), யின் 25ம் சரத்து- இடம்பெயர்ந்தோரின் நிலம், காடு, மீன்பிடி ஆட்சியுரிமையை மதிப்பளித்தல் தொடர்பான முரண்பாடுகள். இது ஓர் தன்னார்வ தன்மை கொண்ட கொள்கை வழிகாட்டலாக காணப்படினும் இடம் பெயர்ந்தோர் பிரச்சினையை அடையாளப்படுத்துவதில் மிகவும் முக்கியமான ஓர் வழிகாட்டலாகும்.

சர்வதேச மட்டத்தில் இடம் பெயர்ந்தோர் பிரச்சினை தொடர்பிலான விவாதங்கள் ஐக்கிய நாடுகள் சபையின் கவனத்தினைப் பெற்றுள்ளது. ஐ.நா வின் அகதிகள் மற்றும் இடம்பெயர்ந்த நபர்களின் வீடு மற்றும் சொத்து இழப்பீடுகள் கொள்கையின் 5ம் அத்தியாயத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது;-

## இடப்பெயர்விலிருந்து பாதுகாத்துக் கொள்ளுதலுக்கான உரிமை

5.1 அவனுடைய அல்லது அவளுடைய வீடு, நிலம் அல்லது வழக்கமான வாழுமிடத்திலிருந்து தன்னிச்சையாக இடம் பெயர்வதிலிருந்து தம்மை பாதுகாக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு.

5.2 அரசுகள், இடம் பெயர்விற்கு எதிரான பாதுகாப்பினை சர்வதேச மனித உரிமைகள், மனிதாபிமான சட்டங்களை மற்றும் தொடர்பான தரங்கள் என்பவற்றினை உள்நாட்டு சட்டவாக்கத்தில் இணைத்துக் கொள்ள வேண்டியதுடன் இப் பாதுகாப்பினை ஆட்சியதிகாரத்திற்கு அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைவருக்கும் வழங்க வேண்டும்.

5.3 அரசுகள், பலவந்த வெளியேற்றம், வீடுகள் உடைத்தல் மற்றும் விவசாய நிலங்களை அழித்தலை தடைசெய்தல் வேண்டும். அத்துடன் தண்டனை நடவடிக்கையாக அல்லது ஒரு வழிமுறையாக அல்லது யுத்த முறையாக நிலங்களை தன்னிச்சையாக அபகரித்தல் அல்லது பறிமுதல் செய்வதனை தடைசெய்தல் வேண்டும்.

5.4 அரசுகள், அரசினாலே அல்லது அரசு சார்பற்ற பங்குதாரர்களினாலே மக்கள் இடப்பெயர்விற்கு உட்படாமல் இருப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும். அரசுகள், தமது ஆட்சியதிகாரத்திற்கு அல்லது கட்டுப்பாட்டின் கீழ் தனிநபர்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் இடப்பெயர்வினை நடத்துதல் அல்லது இடப்பெயர்வில் பங்குபற்றுதலில் இருந்து விலகி இருப்பதை உறுதிப்படுத்த வேண்டும்

பிரஜைகள் இடம்பெயராமல் இருப்பதனை சர்வதேச கொள்கைகள் மிக உறுதியாக பரிந்துரைக்கின்றன. இது மனிதனால் உருவாக்கப்பட்ட ஆயுத மோதல் அல்லது இயற்கை அனர்த்தமாக இருந்தாலும், இது அரசின் பொறுப்பாவதுடன் பாதிக்கப்பட்ட சமூகங்களை மீள் குடியேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளினை மேற்கொள்ள வேண்டும்.

எனவே நாட்டில் இடம் பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளினை மேற்கொள்வது மற்றும் இடம்பெயர்ந்தோர் இல்லாமல் பார்த்துக்கொள்வது இலங்கை அரசின் கடமையாகும். 2015ம் ஆண்டு ஜனவரி அமைதிப் புரட்சியின் போது நாட்டின் வடக்கு கிழக்கு வாழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவாகினார். இதுவே உண்மையில் முன்னால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்து தமது சொந்த ஊரிற்கு திரும்பிய போது கூறிய கூற்றாகும். இதனை நாம் இனவாத கருத்தாக கருதுவதுடன், "வடக்கு கிழக்கு மாகாண தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் என்னைத் தோற்கடித்தனர்" என அவர் தெளிவாக வெளிப்படுத்தினார்.

ஜனவரி ஜனாதிபதி தேர்தலின் பின்னர் ஓர் செயன்முறை ஆரம்பமானது. எனினும் யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த மக்களில் பலர் இன்னும் ஆங்காங்கே சிதறிக்கிடப்பதனால் இவ் செயன்முறை தர்க்கபூர்வமான முடிவினை அடையவில்லை. இந்தியாவில் உள்ள ஆயிரக்கணக்கான அகதிகள் குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டும். அடிப்படை வசதி மற்றும் பாதுகாப்பு வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் தமது தாய் நாட்டிற்கு மீள திரும்புவதற்கு விரும்புவதுடன் ஆர்வமாகவும் உள்ளனர். எனினும் இச் சூழலில் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் குறித்து கவனம் செலுத்த வேண்டியுள்ளதுடன், இடம் பெயர்ந்த பெண்கள் மற்றும் சிறுவர்கள் குறித்து கூடிய முக்கியத்துவம் வழங்கல் வேண்டும். ஓர் சிவில் சமூக பங்காளராக, பாதிக்கப்பட்ட சமூகத்தின் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதில் அரசாங்கத்தின் சாதகமான முயற்சிகளுக்கு எமது ஒத்துழைப்பினை வழங்குவோம்.

இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2015ம் ஆண்டு ஆகஸ்ட் 27ம் திகதி அலரி மாளிகையில் இந்து பத்திரிகைக்கான பேட்டியின் போது கூறியதாவது : " வடக்கு மற்றும் கிழக்கில் தற்போதுள்ள உண்மையான பிரச்சினை யாதெனில், தமது சொந்த காணியில் இருந்து வெளியேற்றப்பட்ட இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவதாகும். – யாழ்ப்பாணத்தில் மற்றும் கிழக்கில் நாட்டின் தேசிய பாதுகாப்பு ஓர் முக்கிய பிரச்சினை, நாங்கள் நிலங்களை விடுவிப்போம். ஓர் சிறப்பான மாதிரியொன்றினை அரச சேவைகள், ஆயுதம் தாங்கிய படைகள் இணைந்து தயாரித்துக்கொண்டிருக்கின்றோம்."

நாம் எல்லோரும், மனித உரிமை பாதுகாவலர்கள் என்ற அடிப்படையில் ஒன்றும் அதிகமாக எதிர்பார்க்க வில்லை. நாட்டில் உள்ள அனைத்து பிரஜைகளுக்கும் ஓர் கண்ணியமான வாழ்க்கையினை கேட்கிறோம். உள்நாட்டில் இடம் பெயர்ந்தோர் அனைவரும் தமது சாதாரண வாழ்க்கைக்கு திரும்ப வேண்டும், அவர்களின் வாழ்வாதாரத்தை புதுப்பிக்கவேண்டும், கலாச்சாரத்தை மீட்டல், மற்றும் தேசிய பொருளாதாரத்தில் பங்கேற்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். மேற்கூறிய அனைத்தும் எல்லா பங்குதாரர்களினது ஒத்துழைப்புடன் இப் பாதிக்கபட்ட மக்களின் வாழ்க்கைக்கு உடனடி மாற்றம் ஏற்படுத்தி கொடுக்கப்படும் என நாம் எதிர்பார்கின்றோம்.

## பரிந்துரைகள்

- உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் தொடர்பில் அடையாளப்படுத்தப்பட்ட தகவலினை அடிப்படையாகக் கொண்டு, மீள்குடியேற்றத்திற்கான உடனடியான மற்றும் முறையான அணுகுமுறை ஒன்று காணப்பட வேண்டும்.

- 13ம் அரசியலமைப்பு திருத்தத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன், உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களின் நில உரிமை உறுதியாக்கப்படுதலுடன் அவர்களை மீள்குடியேற்றுவதற்கான உடனடியான அவதானம் செலுத்தப்படல் வேண்டும்.

- சுற்றுலாதுறை, விவசாயம், வியாபார தேவைகள் பல்வேறுபட்ட இராணுவ முலாபாயங்கள், பொருளாதார தேவைக்கான பிரதேசங்கள் அல்லது வலயங்களாக இராணுவ நடவடிக்கைகளுக்காக ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்படுவதுடன், உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வேண்டும்.

- இலங்கை அரசாங்கம் மற்றும் மீள்குடியேற்றத்துடன் தொடர்புடைய அனைத்து முகவர்களும், செயன்முறையின் திட்டமிடல், நடைமுறைப்படுத்தலில் உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் தலைமைகளின் பங்குபற்றுதலை இணைத்துக் கொள்ள வேண்டும்.

- மக்களிடையில் மிகவும் ஓரங்கட்டப்பட்டுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தொடர்பில் விஷேட அவதானம் மற்றும் முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

- மீள்குடியேற்ற செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சம்மந்தப்பட்ட முகவர்களை உதவிகள் வழங்குவதற்கு அழைப்பு விடுக்க வேண்டும்.

- உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைப்பதற்கான ஒன்றிணைந்த பொறிமுறை ஒன்றினை இலங்கை அரசாங்கம் விருத்தி செய்வதுடன், சம்மந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களுக்கும் இணைந்து செயற்படுவதற்கு அழைப்பு விடுக்க வேண்டும்

- உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீள்குறியேற்றம் செயன்முறையின் போது, யுத்தத்தின் போது காணாமல் போன அவர்களது சட்ட ஆவணங்களை பெற்றுத்தருதல் வேண்டும்.

- வீடு மற்றும் ஏனைய சொத்துக்களை இழந்தவர்களுக்கான இழப்பீடு செலுத்தப்படுதல் வேண்டும்.

- சனத்தொகை கணக்கின்படி மூலம் கூட்டுக்குடும்பங்கள் அடையாளப்படுத்தப்படல் வேண்டும். இவர்களுக்கு நாட்டில் ஏனைய பிரஜைகள் அனுபவத்திற்கு ஒத்ததான வசதிகள் வழங்கப்படல் வேண்டும்

- தமது சொந்த கிராமங்களில் காணி இல்லாதவர்களுக்கு போதுமான காணிகளை வழங்கவேண்டும்.

- “எமது காணிகளை வேறு யாருக்கும் வழங்க மாட்டோம், எமது மண்ணில் நாம் அமைதியாக நாம் வாழவேண்டும்”. (லூ. றோஸ் மேரி- கோணட்புலம் - முகாம்)

- 25 வருட இடம் பெயர்ந்த முகாம் வாழ்க்கை இன்னும் எத்தனை வருடங்களுக்கு இது தொடர வேண்டும்.? தற்போதைய ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் அரசாங்கம் நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் நீதி பெற்றுத்தரும் என்பது எம் எதிர்பார்ப்பு. இதன் போது மிகவும் பாதிப்படையக்கூடிய சமூகங்களான உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் குறிப்பிடத்தக்கவை. சம்மந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களும் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் உடனடியாக ஓர் மாற்றத்தினை ஏற்படுத்த வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.





இடம் பெயர்ந்த முகாம் சிறுவர்கள் :- இம் மக்களின் எதிர்காலத்தை நாம் கருத்திற் கொள்கிறோமா?





“ஒடுக்கு முறைக்கு மத்தியிலும் நாம் மௌனமாக இருக்க வில்லை” காணி உரிமைக்காக மக்கள் போராட்டத்தில





 

இடம் பெயர்ந்து முகாம் சிறுவர்கள் :- இம் மக்களின் எதிர்காலத்துக்கு யார் கூறுவீர் சொல்லுவீரோ?

 

"இச்சத் துறைக்கு மத்தியிலும் நாம் வெல்வோம் இந்தத் தீர்வை" என்று உறுதியாக மக்கள் போராட்டத்தில்

 



ISBN : 978-955-8103-31-9

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம்
மற்றும் பிரஜா அபிலாஷை வலையமைப்பு

இல.10, மல்வத்த வீதி, நீர்கொழும்பு, இலங்கை.
தொ.பே: 94 312239750 தொ.ந: 94 314870658
மின்னஞ்சல்: nafsosl@gmail.com
இணையத்தளம்: www.nafso-one.org